# டால்பின்®

## உன்னால் முடியும்

8

புதிய பதிப்பு

# சமூக அறிவியல்

100/100 உறுதி

Avail

வரைபடப் பயிற்சிப் புத்தகம்



அரசு புதிய பாடத்திட்டத்தின்
படி விடைக் குறிப்பு அடிப்படையில்
தயாரிக்கப்பட்ட சிறப்பு உரைநூல்

டால்பின் பப்ளிகேசன்ஸ்®

டால்பின் சமூக அறிவியல் - 8

# டால்பின்

## உன்னால் முடியும்

# சமூக அறிவியல்

புதிய பதிப்பு

# 8

அரசு புதிய பாடத்திட்டத்தின் படி விடைக் குறிப்பு
அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சிறப்பு உரைநூல்

Avail வரைபடப்
பயிற்சிப் புத்தகம்

98653 06197 | 89256 77710 | 99435 67646
டால்பின் பப்ளிகேசன்ஸ்®
தரமே எங்களின் தாரக மந்திரம்
239, கீழப்பட்டித்தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம். த.நா.
Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.com

© All Copyrights reserved

விலை : ரூ.153

# பதிப்புரை

**சமூக அறிவியல் ஆசிரிய பெருமக்கள் மற்றும் மாணவ மாணவியர்களுக்கு முதற்கண் வணக்கம்.**

➤ எங்கள் டால்பின் பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தின் சமூக அறிவியல் கையேடு,

- மாணவர்களுக்கு என்ன தேவை.
- மாணவர்கள் தேர்வை எவ்வாறு எதிர்கொள்வது.

➤ என்பன போன்ற பல நல்ல செயல் வடிவங்களை மனதில் கொண்டு பல சமூக அறிவியல் ஆசிரியர் பெருமக்களின் ஆலோசனைகளுக்கு இணங்க சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

➤ தமிழக அரசு திருத்தியமைத்து வெளியிட்ட ஒரே புத்தகத்தின் அடிப்படையில் புத்தக வினா விடைகள் மாணவர்கள் புரிந்துகொள்ளும் வண்ணம் எளிமையான வார்த்தைகள் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

➤ 5 மற்றும் 8 மதிப்பெண் வினாக்கள் Key Words கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

**வரைபட பயிற்சி புத்தகத்தில்,**

➤ வரைபடங்கள் தேர்வில் கேட்கப்படும் வரைபடம் கொண்டு எளிதில் வரையும் வண்ணம் கொடுக்கப்பட்டுள்ளது.

➤ தேர்வை எதிர்கொள்ளும் வகையில் 5 மதிப்பெண்கள், 8 மதிப்பெண்கள் எனப் பிரித்து பயிற்சி வரைபடங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

➤ மாணவர்கள் தேர்வில் 100/100 மதிப்பெண் பெறும் வகையில் எங்களது கையேடு மற்றும் வரைபட பயிற்சி புத்தகமானது வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**அன்புடன்**
**பாட வல்லுநர் குழு,**
**டால்பின் பதிப்பகத்தார்.**

©

## புத்தகங்களைப் பெறுவதற்கு

**மரியாதைக்குரிய தலைமையாசிரியர்கள் / ஆசிரியைகள் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கு !**

வணக்கம். **டால்பின் பப்ளிகேஷன்ஸ்** நிறுவனத்திற்கு தாங்கள் வழங்கி வருகின்ற பேராதரவிற்கு எங்களின் சிரம்தாழ்ந்த நன்றிகள். நீங்களே எங்களின் வளர்ச்சியின் அடித்தளம். தற்பொழுது தாங்கள் தங்களுக்குத் தேவையான புத்தகங்களைப் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றிப் பெற்றுக்கொள்ளலாம்.

**புத்தகங்களைப் பெற**

| | |
|---|---|
| அலைபேசி எண் (Mobile No) | **: 9865306197 / 8925677710 / 9943567646** |
| கட்செவி எண் (Whatsapp No) | **: 9345314146** |
| குறுஞ்செய்தி (Sms) | **: 9345330937** |
| வலைதளம் (Website) | **: www.kalvidolphin.com** |
| மின்னஞ்சல் (E-mail ID) | **: dolphin.pub2005@gmail.com** |

## பணம் செலுத்துவதற்கான விவரங்கள்

**கேட்பு வரைவோலை (D.D.) அல்லது காசோலை (Cheque) :**

டால்பின் பப்ளிகேஷன்ஸ் - ஸ்ரீவில்லிபுத்தூர் **(DOLPHIN PUBLICATIONS, SRIVILLIPUTTUR)** என்ற பெயருக்கு எடுத்து அனுப்பவும்.

## வங்கிக் கணக்கு விவரங்கள்

Karur Vysya Bank
DOLPHIN PUBLICATIONS
SCAN & PAY WITH ANY UPI APP
wlpos.2753796a@kvb
TID: 2753796A
BHIM UPI

ICICI Bank iMobile · BHIM · pockets
Merchant Name: DOLPHIN PUBLICATIONS
Mobile Number : 8668163362
Steps to Pay UPI QR Code
Open UPI app > Select Tap to Pay > Scan QR Code > Enter Amount

G Pay **63743 17883**

CITY UNION BANK
DOLPHIN PUBLICATIONS
MID: E01020101079104
SCAN & PAY
UPI ID:CFST20003166@CUB
BHIM UPI

| **KARUR VYSYA BANK** | **CITY UNION BANK** |
|---|---|
| A/C No : 1804135000006000 | A/C No : 328109000204092 |
| IFSC CODE : KVBL0001804 | IFSC CODE : CIUB0000328 |
| BRANCH : Srivilliputtur | BRANCH : Srivilliputtur |

| **ICICI BANK** | **TAMILNADU MERCANTILE BANK** |
|---|---|
| A/C No : 446005500030 | A/C No : 328150310875103 |
| IFSC CODE : ICIC0004460 | IFSC CODE : TMBL0000328 |
| BRANCH : Srivilliputtur | BRANCH : Srivilliputtur |

**பணம் செலுத்திய பின் கீழ்க்கண்ட தொலைபேசி எண்களில் கண்டிப்பாக தகவல் தெரிவிக்கவும்**

**98653 06197, 89256 77710, 99435 67646**

# பாடப் பொருளாக்கம்


| பயிற்சி எண் | பொருளடக்கம் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|
| **வரலாறு** | | | |
| 1. | ஐரோப்பியர்களின் வருகை | 1 | ஜூன் |
| 2. | வர்த்தகத்திலிருந்து பேரரசு வரை | 7 | ஜூன் |
| 3. | கிராம சமூகமும் வாழ்க்கை முறையும் | 15 | ஜூலை |
| 4. | மக்களின் புரட்சி | 21 | ஆகஸ்ட் |
| 5. | இந்தியாவில் கல்வி வளர்ச்சி | 27 | அக்டோபர் |
| 6. | இந்தியாவில் தொழிலகங்களின் வளர்ச்சி | 33 | நவம்பர் |
| 7. | ஆங்கிலேயர் ஆட்சியில் நகர்ப்புற மாற்றங்கள் | 39 | நவம்பர் |
| 8. | காலங்கள்தோறும் இந்தியப் பெண்களின் நிலை | 45 | ஜனவரி |

| பயிற்சி எண் | பொருளடக்கம் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|
| | **புவியியல்** | | |
| 1. | பாறை மற்றும் மண் | 51 | ஜூன் |
| 2. | வானிலை மற்றும் காலநிலை | 58 | ஜூலை |
| 3. | நீரியல் சுழற்சி | 64 | ஜூலை |
| 4. | இடம் பெயர்தல் மற்றும் நகரமயமாதல் | 70 | ஆகஸ்ட் |
| 5. | இடர்கள் | 76 | அக்டோபர் |
| 6. | தொழிலகங்கள் | 82 | அக்டோபர் |
| 7. | கண்டங்களை ஆராய்தல் (ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்க்டிகா) | 88 | நவம்பர் & டிசம்பர் |
| 8. | நிலவரைபடங்களைக் கற்றறிதல் | 95 | ஜனவரி |
| | **குடிமையியல்** | | |
| 1. | மாநில அரசு எவ்வாறு செயல்படுகிறது | 101 | ஜூன் |
| 2. | குடிமக்களும் குடியுரிமையும் | 106 | ஜூலை |

| பயிற்சி எண் | பொருளடக்கம் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|
| 3. | சமயச்சார்பின்மையைப் புரிந்துகொள்ளுதல் | 110 | ஆகஸ்ட் |
| 4. | மனித உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும் | 117 | அக்டோபர் |
| 5. | சாலைப் பாதுகாப்பு விதிகள் மற்றும் நெறிமுறைகள் | 124 | நவம்பர் |
| 6. | பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை | 132 | ஜனவரி |
| 7. | நீதித்துறை | 138 | பிப்ரவரி |
| | **பொருளியல்** | | |
| 1. | பணம், சேமிப்பு மற்றும் முதலீடுகள் | 145 | ஆகஸ்ட் & செப்டம்பர் |
| 2. | பொது மற்றும் தனியார் துறைகள் | 152 | பிப்ரவரி |
| | வரைபடங்கள் | 159 - 170 | |
| | வினா வங்கி | 171 - 184 | |

# வரலாறு

## அலகு – 1

# ஐரோப்பியர்களின் வருகை



### கற்றலின் நோக்கங்கள்

- நவீன இந்திய வரலாற்று ஆதாரங்களின் வகைகள் பற்றி அறிதல்
- இந்தியாவில் போர்ச்சுகீசியரின் வர்த்தகத்தைப் புரிந்துகொள்ளுதல்
- இந்தியாவில் போர்ச்சுகீசியர்கள் மற்றும் டச்சுக்காரர்கள் ஆதிக்கத் தாக்கத்தை புரிந்து கொள்ளுதல்
- டென்மார்க்கின் காலனி குடியேற்றங்களைப் பற்றி அறிதல்
- ஆங்கில மற்றும் பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனங்களின் வருகை மற்றும் நிலைப்பாடுகளை அறிதல்

N9SPV

### ✸ கற்றல் விளைவுகள்:

**SS810** ➢ பல்வேறு சான்றுகளைப் பயன்படுத்தி பண்டைய, இடைக்கால, நவீன இந்தியாவை வேறுபடுத்துதல்

**SS811** ➢ ஆங்கிலேய கிழக்கிந்திய நிறுவனம் எவ்வாறு ஆதிக்கம் மிக்க சக்தியாக மாறியது என்பதை விளக்குதல்.

**மதிப்பீடு** **பக்கம் : 9**

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. **இந்தியாவில் போர்ச்சுக்கீசிய ஆதிக்கத்திற்கு அடித்தளம் அமைத்தவர் யார்?**

அ) வாஸ்கோடகாமா ஆ) பார்த்தலோமியோ டயஸ்

இ அல்போன்சோ–டி–அல்புகர்க் ஈ) பிரான்சிஸ்கோ–டி–அல்மெய்டா

**[இ) அல்போன்சோ-டி-அல்புகர்க்]**

2. பின்வரும் ஐரோப்பிய நாடுகளுள் இந்தியாவுக்கு கடல்வழியைக் கண்டுபிடிப்பதில் முதன்மையாக இருந்த நாடு எது?

அ) நெதர்லாந்து (டச்சு) ஆ) போர்ச்சுகல் இ) பிரான்ஸ் ஈ) பிரிட்டன்

[ஆ) போர்ச்சுகல்]

3. 1453-ஆம் ஆண்டு கான்ஸ்டாண்டிநோபிள் யாரால் கைப்பற்றப்பட்டது?

அ) பிரான்ஸ் ஆ) துருக்கி இ) நெதர்லாந்து (டச்சு) ஈ) பிரிட்டன் [ஆ) துருக்கி]

4. சர் வில்லியம் ஹாக்கின்ஸ் __________ நாட்டைச் சேர்ந்தவர்.

அ) போர்ச்சுக்கல் ஆ) ஸ்பெயின் இ) இங்கிலாந்து ஈ) பிரான்ஸ்

[இ) இங்கிலாந்து]

5. இந்தியாவில் ஆங்கிலேயர்கள் கட்டிய முதல் கோட்டை

அ) புனித வில்லியம் கோட்டை ஆ) புனித ஜார்ஜ் கோட்டை

இ) புனித லூயிஸ் கோட்டை ஈ) புனித டேவிட் கோட்டை

[ஆ) புனித ஜார்ஜ் கோட்டை]

6. பின்வரும் ஐரோப்பிய நாட்டினருள் வியாபாரத்திற்காக, இந்தியாவிற்கு வருகை தந்த கடைசி ஐரோப்பிய நாட்டினர்

அ) ஆங்கிலேயர்கள் ஆ) பிரெஞ்சுக்காரர்கள் இ) டேனியர்கள் ஈ) போர்ச்சுக்கீசியர்கள்

[ஆ) பிரெஞ்சுக்காரர்கள்]

7. தமிழ்நாடு கடற்கரையோரத்தில் உள்ள தரங்கம்பாடி __________ வர்த்தக மையமாக இருந்தது.

அ) போர்ச்சுக்கீசியர்கள் ஆ) ஆங்கிலேயர்கள் இ) பிரெஞ்சுக்காரர்கள் ஈ) டேனியர்கள்

[ஈ) டேனியர்கள்]

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இந்தியாவின் தேசிய ஆவணக்காப்பகம் (NAI) __________ல் அமைந்துள்ளது. [புதுடெல்லி]
2. போர்ச்சுக்கீசிய மாலுமியான பார்த்தலோமியோ டயஸ் __________ என்பவரால் ஆதரிக்கப்பட்டார். [மன்னர் இரண்டாம் ஜான்]
3. இந்தியாவில் அச்சு இயந்திரம் 1556இல் __________அரசால் கோவாவில் நிறுவப்பட்டது. [போர்ச்சுகீசிய அரசால்]
4. முகலாயப் பேரரசர் __________ இந்தியாவில் ஆங்கிலேயர்கள் வர்த்தகம் செய்ய அனுமதி அளித்தார். [ஜஹாங்கீர்]
5. பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் __________ என்பவரால் நிறுவப்பட்டது. [கால்பர்ட்]
6. __________ என்ற டென்மார்க் மன்னர், டேனிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தை உருவாக்க ஒரு பட்டயத்தை வெளியிட்டார். [நான்காம் கிரிஸ்டியன்]

## III. பொருத்துக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | டச்சுக்காரர்கள் | அ) | 1664 | ஆ) | 1602 |
| 2. | ஆங்கிலேயர்கள் | ஆ) | 1602 | இ) | 1600 |
| 3. | டேனியர்கள் | இ) | 1600 | ஈ) | 1616 |
| 4. | பிரெஞ்சுக்காரர்கள் | ஈ) | 1616 | அ) | 1664 |

## IV. சரியா / தவறா எனக் குறிப்பிடுக.

1. சுயசரிதை, எழுதப்பட்ட ஆதாரங்களுள் ஒன்று ஆகும். [சரி]
2. நாணயங்கள் பயன்பாட்டு பொருள் ஆதாரங்களுள் ஒன்று ஆகும். [சரி]
3. ஆனந்தரங்கம், பிரிட்டிஷ் மொழிபெயர்ப்பாளராக இருந்தார். [தவறு]
4. வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்படும் இடங்கள் ஆவணக் காப்பகங்கள் என்றழைக்கப்படுகிறது. [சரி]

## V. 1) பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை (✓) செய்க.

1. கவர்னர் நினோ-டி-குன்கா போர்ச்சுக்கீசிய தலைநகரை கொச்சியிலிருந்து கோவாவிற்கு மாற்றினார்.
2. போர்ச்சுக்கீசியர்கள் இந்தியாவிலிருந்து கடைசியாக வெளியேறினர்.
3. டச்சுக்காரர்கள், சூரத்தில் தங்கள் முதல் வணிக மையத்தை நிறுவினர்.
4. இங்கிலாந்தின் மன்னர் முதலாம் ஜேம்ஸ், ஜஹாங்கீர் அவைக்கு சர் தாமஸ் ரோவை அனுப்பினார்.

அ) 1 மற்றும் 2 சரி ஆ) 2 மற்றும் 4 சரி இ) 3 மட்டும் சரி ஈ) 1, 2 மற்றும் 4 சரி

[ஈ) 1, 2 மற்றும் 4 சரி]

## 2) தவறான இணையைக் கண்டறிக.

அ) பிரான்சிஸ் டே - டென்மார்க்
ஆ) பெட்ரோ காப்ரல் - போர்ச்சுகல்
இ) கேப்டன் ஹாக்கின்ஸ் - இங்கிலாந்து
ஈ) கால்பர்ட் - பிரான்ஸ்

[அ) பிரான்சிஸ் டே - டென்மார்க்]

## VI. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளி.

1. **ஆவணக் காப்பகங்கள் பற்றி சிறுகுறிப்பு தருக.**
   - வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்படும் இடம் "ஆவணக் காப்பகம்" என்று அழைக்கப்படுகின்றது.
   - இந்திய தேசிய ஆவணக் காப்பகம் (**NAI**) "புதுடெல்லியில்" அமைந்துள்ளது.

**2. நாணயங்களின் முக்கியத்துவம் பற்றி எழுதுக.**

- நாணயங்கள் நிர்வாக வரலாற்றை அறிய ஒரு நல்ல ஆதாரமாகத் திகழ்கின்றன.
- நவீன இந்தியாவின் முதல் நாணயம் கி.பி.1862 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் ஆட்சியில் வெளியிடப்பட்டது.

---

**3. இளவரசர் ஹென்றி “மாலுமி ஹென்றி” என ஏன் அழைக்கப்படுகிறார்?**

- போர்ச்சுக்கீசிய இளவரசர் ஹென்றி உலகின் அறியப்படாத பகுதிகளை ஆராயவும், சாகச வாழ்க்கையை மேற்கொள்ளவும் தனது நாட்டு மக்களை ஊக்குவித்தார்.
- எனவே போர்ச்சுக்கீசிய இளவரசர் ஹென்றி “மாலுமி ஹென்றி” என்று அழைக்கப்படுகின்றார்.

---

**4. இந்தியாவில் டச்சுக்காரர்களால் நிறுவப்பட்ட முக்கிய வர்த்தக மையங்களின் பெயர்களை எழுதுக.**

**இந்தியாவில் டச்சுக்காரர்களால் நிறுவப்பட்ட முக்கிய வர்த்தக மையங்கள்**

- பழவேற்காடு
- சூரத்
- சின்சுரா
- காசிம்பஜார்
- பாட்னா
- நாகப்பட்டினம்
- பாலசோர்
- கொச்சின் போன்றவையாகும்.

---

**5. இந்தியாவில் இருந்த ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்களைக் குறிப்பிடுக.**

**இந்தியாவில் ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்கள்**

- சூரத்
- ஆக்ரா
- அகமதாபாத்
- மசூலிப்பட்டினம்
- பம்பாய்
- கல்கத்தா போன்றவையாகும்.

---

## VII. விரிவான விடையளி.

**1. நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் பற்றி குறிப்பிடுக.**

**நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள்:**

- நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் நாட்டின் அரசியல், பொருளாதார மற்றும் கலாச்சார முன்னேற்றங்களை பற்றி அறிய நமக்கு உதவுகின்றன. அவை இரண்டு வகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன.
    - ★ எழுதப்பட்ட ஆதாரங்கள்
    - ★ பயன்பாட்டு பொருள் ஆதாரங்கள்

**எழுதப்பட்ட ஆதாரங்கள்**

- இலக்கியங்கள், பயணக் குறிப்புகள், நாட்குறிப்புகள், சுயசரிதை, துண்டு பிரசுரங்கள், அரசாங்க ஆவணங்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் ஆகியவை எழுதப்பட்ட ஆதாரங்களாகும்.
- குறிப்பாக ஆனந்தரங்கம் என்பவரின் நாட்குறிப்புகள் அரசியல் தீர்வுகளை வெளிப்படையாக விளக்கும் வரலாற்று ஆதாரமாகும்.
- இதன் விளைவாக கலை, இலக்கியம், வரலாறு, அறிவியல் போன்ற துறைகளைப் பற்றி மக்கள் எளிதாக அறிய முடிந்தது.

**பயன்பாட்டு பொருள் ஆதாரங்கள்**

- பயன்பாட்டுப் பொருள் ஆதாரங்களான பல ஓவியங்கள் மற்றும் சிலைகள் நவீன இந்திய வரலாற்றின் முதன்மை ஆதாரங்களாக உள்ளன.
- அவை தேசியத் தலைவர்களின் சாதனைகளையும், வரலாற்றுப் பிரமுகர்கள் பற்றிய தகவல்களையும் நமக்கு நிறைய தருகின்றன.

---

**2. போர்ச்சுக்கீசியர்கள் எவ்வாறு இந்தியாவில் தங்களது வர்த்தக மையங்களை நிறுவினர்?**

- ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும், போர்ச்சுக்கல் மட்டும் இந்தியாவிற்கு புதிய கடல்வழியைக் கண்டுபிடிப்பதில் மிகவும் ஆர்வமாக இருந்தது.
- வாஸ்கோடகாமா 1501-இல் இந்தியாவிற்கு வந்தபோது கண்ணனூரில் ஒரு வர்த்தக மையத்தை நிறுவினார்.
- கி.பி.1505-ல் பிரான்சிஸ்கோ-டி-அல்மெய்டா இந்திய போர்ச்சுக்கீசிய பகுதிகளின் முதல் கவர்னரானார்.
- கி.பி.1509-ல் கவர்னரான அல்போன்சோ-டி-அல்புகர்க் இந்தியாவில் போர்ச்சுக்கீசிய அதிகாரத்தை உண்மையில் நிறுவினர்.
- பின்னர் கள்ளிக்கோட்டை, கொச்சின் பகுதிகளிலும் வர்த்தக மையங்களை நிறுவினார்,
- 16-ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் மேற்கு கடற்கரையில் கோவா, டையூ, டாமன் மற்றும் பம்பாய் போன்ற பகுதிகளைக் கைப்பற்றுவதில் வெற்றி பெற்றனர்.
- வங்காள கடற்கரையில் ஹீக்ளி, சென்னை கடற்கரையில் சாந்தோம் போன்ற பகுதிகளைக் கைப்பற்றினர்.
- போர்ச்சுக்கீசியர்கள் இந்தியாவில் புகையிலை சாகுபடியை அறிமுகப்படுத்தினர்.
- 1556-இல் போர்ச்சுக்கீசியர்களால் கோவாவில் அச்சு இயந்திரம் அமைக்கப்பட்டது.

---

**3. ஆங்கிலேயர்கள் எவ்வாறு இந்தியாவில் தங்களது வர்த்தக மையங்களை நிறுவினர்?**

- 1608 ஆம் ஆண்டு ஜஹாங்கீர் அவைக்கு மாலுமி வில்லியம் ஹாக்கின்ஸ் சில சலுகைகளைப் பெற அனுப்பிவைக்கப்பட்டார்.
- அவர் சூரத் நகரில் ஓர் வணிக மையத்தை அமைக்க அனுமதி கோரினார். ஆனால் போர்ச்சுக்கீசிய தலையீட்டால் ஜஹாங்கீர் அனுமதி வழங்கவில்லை.
- இந்நிலையில் 1612இல் சூரத் அருகே நடைபெற்ற கடற்போரில் ஆங்கிலத் தளபதி தாமஸ் பெஸ்ட், போர்ச்சுக்கீசிய கடற்படையைத் தோற்கடித்தார். பேரரசர் ஜஹாங்கீர், 1613இல் சூரத்தில் ஆங்கில வர்த்தக மையத்தை அமைக்க அனுமதித்தார்.

- 1615 இல் ஜஹாங்கீர் அவைக்கு இங்கிலாந்து மன்னர் ஜேம்ஸ் அவர்களால் சர் தாமஸ் ரோ அனுப்பிவைக்கப்பட்டார். அவர் ஆக்ராவில் மூன்றாண்டுகள் தங்கி இருந்தார். மூன்றாம் ஆண்டு இறுதியில் பேரரசர் ஜஹாங்கீரிடம் இந்தியாவில் வணிகம் செய்யும் உரிமையைப் பெற்றார். உரிமையைப் பெற்ற சர் தாமஸ் ரோ புறப்படும் முன் ஆக்ரா, அகமதாபாத் மற்றும் புரோச் ஆகிய இடங்களில் வணிக மையங்களை நிறுவினார்.
- ஆங்கிலேயர்கள் தங்களது முதல் வணிக மையத்தை வங்காள விரிகுடா கடற்கரையில் உள்ள மசூலிப்பட்டினத்தில் 1611இல் நிறுவினர்.
- 1639இல் பிரான்சிஸ் டே என்ற ஆங்கில வணிகர், சந்திரகிரி மன்னரான சென்னப்ப நாயக்கர் என்பவரிடமிருந்து மெட்ராசை குத்தகைக்குப் பெற்றார். அங்கு ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி 'புனித ஜார்ஜ் கோட்டை' என அழைக்கப்படும் தனது புகழ்வாய்ந்த வணிக மையத்தை நிறுவியது.
- இங்கிலாந்து மன்னர் இரண்டாம் சார்லஸ், போர்ச்சுக்கீசிய இளவரசி காதரினை திருமணம் செய்து கொண்டார். திருமண சீதனமாக பம்பாய் தீவை போர்ச்சுக்கீசிய மன்னரிடமிருந்து பெற்றார். 1668இல் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி ஆண்டுக்கு 10 பவுண்டுகள் குத்தகை கொடுத்து பம்பாய் தீவை மன்னர் இரண்டாம் சார்லசிடமிருந்து பெற்றது.
- 1690 ஆம் ஆண்டு சுதாநுதி என்ற இடத்தில் ஜாப் சார்னாக் என்பவரால் ஒரு வர்த்தகமையம் நிறுவப்பட்டது. சுதாநுதி, காளிகட்டம் மற்றும் கோவிந்தபூர் ஆகிய மூன்று கிராமங்களின் ஜமீன்தாரி உரிமையை 1698 இல் கிழக்கிந்திய கம்பெனி பெற்றது, இந்த மூன்று கிராமங்கள் பின்னாளில் கல்கத்தா நகரமாக வளர்ச்சி பெற்றது.
- 1858க்குப் பிறகு இந்தியா ஆங்கில அரசின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

## VIII. வரைபட திறன்

1. **இந்திய ஆறுகள் வரைபடத்தில் கீழ்க்கண்ட ஐரோப்பிய வர்த்தக மையங்களைக் குறித்து காட்டுக.**

   1. கள்ளிக்கோட்டை 2. கொச்சின் 3. மெட்ராஸ்
   4. பாண்டிச்சேரி 5. சூரத் 6. சின்சுரா
   7. பழவேற்காடு 8. கல்கத்தா

## IX. உயர் சிந்தனை வினா

1. **கான்ஸ்டாண்டி நோபிள் வீழ்ச்சி ஐரோப்பிய நாடுகளை எவ்வாறு பாதித்தது?**
   - உலக வரலாற்றில் கான்ஸ்டாண்டி நோபிளின் வீழ்ச்சி ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றன.
   - 1453-ல் துருக்கியர்கள் கைப்பற்றினர்.
   - கிழக்கு நாடுகளுக்கு ஐரோப்பாவின் பொருட்கள் வருவது தடைப்பட்டது.
   - ஐரோப்பியர் புதிய கடல் வழிகளைக் கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டனர்.

## X. மாணவர் செயல்பாடு (மாணவர்களுக்கானது)

1. **நவீன இந்திய ஆதாரங்களை தொகுத்து ஒரு அட்டவணை தயார் செய்க.**

# புவியியல்

## அலகு – 1

## பாறை மற்றும் மண்



### கற்றலின் நோக்கங்கள்

- பாறைகளின் தன்மைகள்; அவற்றின் வகைகள் மற்றும் பயன்களைப் புரிந்து கொள்ளுதல்
- பல்வேறு வகையான பாறைகளை அடையாளம் காணல்
- மண்ணின் தன்மை அதன் கூட்டமைப்புப் பற்றி அறிதல்
- மண்வளப் பாதுகாப்பு மற்றும் அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளுதல்

2B430

### ✷ கற்றல் விளைவுகள்:

**SST 807** ➢ அனைத்து பகுதிகளிலும் வளர்ச்சியை நிலைநாட்ட இயற்கை வளங்களான நீர், மண், காடு போன்றவற்றை நியாயமான முறையில் பயன்படுத்துதலை நியாயப்படுத்துதல்.

### மதிப்பீடு பக்கம் : 108

#### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. **கீழ்க்கண்டவற்றுள் எது பாறைக் கோளம் என அழைக்கப்படுகிறது?**

அ) வளிமண்டலம் ஆ) உயிர்க்கோளம் இ) நிலக்கோளம் ஈ) நீர்க்கோளம்

**[இ) நிலக்கோளம்]**

2. உலக மண் நாளாக கடைபிடிக்கப்படும் நாள்
அ) ஆகஸ்ட் 15 ஆ) ஜனவரி 12 இ) அக்டோபர் 15 ஈ) டிசம்பர் 5
[ஈ) டிசம்பர் 5]

3. உயிரினப் படிமங்கள் __________ பாறைகளில் காணப்படுகின்றன.
அ) படிவுப்பாறைகள் ஆ) தீப்பாறைகள்
இ) உருமாறியப் பாறைகள் ஈ) அடியாழப் பாறைகள் [அ) படிவுப்பாறைகள்]

4. மண்ணின் மேல் நிலை அடுக்கு.
அ) கரிம மண் அடுக்கு ஆ) அடி மண் அடுக்கு இ) அடி மண் ஈ) அடித்தள பாறை
[அ) கரிம மண் அடுக்கு]

5. பருத்தி வளர ஏற்ற மண்
அ) செம்மண் ஆ) கரிசல் மண் இ) வண்டல் மண் ஈ) மலை மண்
[ஆ) கரிசல் மண்]

6. மண்ணின் முக்கிய கூறு
அ) பாறைகள் ஆ) கனிமங்கள் இ) நீர் ஈ) இவை அனைத்தும்
[ஆ) கனிமங்கள்]

7. கீழ்க்காண்பனவற்றில் எவ்வகை மண் பரவலாகவும் அதிக வளமுள்ளதாகவும் உள்ளது?
அ) வண்டல் மண் ஆ) கரிசல் மண் இ) செம்மண் ஈ) மலை மண்
[அ) வண்டல் மண்]

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. பாறைகளைப் பற்றிய அறிவியல் சார்ந்த படிப்பு __________. [பாறையியல் (petrology)]
2. __________ மண் தினைப் பயிர்கள் விளைவிப்பதற்கு ஏற்றதாகும். [செம்மண்]
3. ‘புவியின் தோல்’ என்று __________ அழைக்கப்படுகிறது. [மண்]
4. உருமாறிய பாறைகளின் ஒரு வகையான __________ பாறை தாஜ்மகால் கட்ட பயன்படுத்தப்பட்டது. [வெள்ளை பளிங்கு]
5. __________ பாறை ‘முதன்மை பாறை’ என்று அழைக்கப்படுகிறது. [தீப்]

## III. சரியா / தவறா எனக் குறிப்பிடுக.

1. தீப்பாறைகள் முதன்மை பாறைகள் என்று அழைக்கப்படுகிறது. [சரி]
2. களிப்பாறையிலிருந்து பலகைக்கல் (Slate) உருவாகிறது. [தவறு]
3. செம்மண் கசிந்தோடல் (Leaching) செயல்முறைகளில் உருவாகிறது. [தவறு]
4. இயற்கை மணலுக்கு மாற்றாக கட்டுமான பணிகளுக்கு “செயற்கை மணல்” (M-Sand) பயன்படுகிறது. [சரி]
5. படிவுப் பாறைகளைச் சுற்றி எரிமலைகள் காணப்படுகின்றன. [தவறு]

## IV. பொருத்துக.

1)

| | | | |
|---|---|---|---|
| i) | கிரானைட் | 1. | அடிப்பாறை |
| ii) | மண் அடுக்கு | 2. | அடியாழப் பாறைகள் |
| iii) | பாரன் தீவு | 3. | பட்டைப் பயிரிடல் வேளாண்மை |
| iv) | மண் வளப்பாதுகாப்பு | 4. | செயல்படும் எரிமலை |

அ) 2 1 4 3 ஆ) 2 1 3 4 இ) 4 3 2 1 ஈ) 3 4 2 1

**[அ) 2 1 4 3]**

2)

| | | | |
|---|---|---|---|
| i) | பசால்ட் (கருங்கல்) | 1. | ஆந்த்ரசைட் |
| ii) | சுண்ணாம்புப் பாறை | 2. | வெளிப்புற தீப்பாறைகள் |
| iii) | நிலக்கரி | 3. | உருமாறியப் பாறைகள் |
| iv) | ஜெனிஸ் (நைஸ்) | 4. | படிவுப்பாறைகள் |

அ) 2 4 1 3 ஆ) 2 4 1 3 இ) 3 1 2 4 ஈ) 3 1 4 2

**[ஈ) 3 1 4 2]**

## V. கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை ஆராய்ந்து தவறான விடையைத் தேர்வு செய்க.

1. அ) தீப்பாறைகள் முதன்மைப் பாறைகள் என்று அழைக்கப்படுகிறது.
ஆ) பாறைகள் சிதைவடைவதால் மண் உருவாகிறது.
இ) படிவுப் பாறைகள் கடினமான தன்மை கொண்டவை.
ஈ) தக்காண பீடபூமி பகுதிகள் தீப்பாறைகளால் உருவானவை.

**[இ) படிவுப் பாறைகள் கடினமான தன்மை கொண்டவை.]**

2. அ) மண்ணரிப்பு மண் வளத்தை குறைக்கிறது.
ஆ) இயக்க உருமாற்றம் அதிக வெப்பத்தினால் உருவாகிறது.
இ) மண் ஒரு புதுப்பிக்கக் கூடிய வளம்.
ஈ) இலைமக்குகள் மேல் மட்ட மண்ணின் ஒரு பகுதியாகும்.

**[ஆ) இயக்க உருமாற்றம் அதிக வெப்பத்தினால் உருவாகிறது.]**

## VI. கொடுக்கப்பட்ட கூற்றுகளை ஆராய்ந்து சரியான கூற்றைக் கண்டுபிடித்து சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**கூற்று 1 - படிவுப் பாறைகள் பல்வேறு அடுக்குகளைக் கொண்டவை.**

**கூற்று 2 - படிவுப் பாறைகள் பல்வேறு காலங்களில் உருவானவை.**

அ) கூற்று 1 மற்றும் 2 சரி. ஆனால் கூற்று 2 ஆனது கூற்று 1க்கு சரியான விளக்கம்.
ஆ) கூற்று 1 மற்றும் 2 சரி. ஆனால் கூற்று 2 ஆனது கூற்று 1க்கு சரியான விளக்கம் அல்ல.
இ) கூற்று 1 சரி ஆனால் கூற்று 2 தவறு. ஈ) கூற்று 2 சரி ஆனால் கூற்று 1 தவறு.

**[அ) கூற்று 1 மற்றும் 2 சரி. ஆனால் கூற்று 2 ஆனது கூற்று 1க்கு சரியான விளக்கம்.]**

## VII. காரணம் கூறுக

1. **நீர்த்தேக்கப்படுகைகளில் இரசாயன படிவுப் பாறைகள் காணப்படுகின்றன.**
   - இரசாயன படிவுப்பாறைகள் பாறைகளிலுள்ள கனிமங்கள் நீரில் கரைந்து இரசாயன கலவையாக மாறுவதால் உருவாகின்றன.
   - இப்பாறைகள் உப்பு படர் பாறைகள் என்றும் அழைக்கப்படுகின்றன.

2. **தீப்பாறைகள் எரிமலை பகுதிகளில் காணப்படுகிறது.**
   - தீப்பாறைகள் புவியின் ஆழமானப் பகுதியிலிருந்து வெளியேறும் உருகிய பாறைக் குழம்பு உறைந்து உருவானதாகும்.
   - மேலும் இப்பாறைகள் எரிமலைப் பகுதியில் காணப்படுகிறது.

## VIII. வேறுபடுத்துக.

1. **உருமாறிய பாறைகள் மற்றும் படிவுப்பாறைகள்.**

| உருமாறிய பாறைகள் | படிவுப்பாறைகள் |
|---|---|
| அதிக வெப்பம், அழுத்தம் காரணமாக தீப்பாறைகளும், படிவுப் பாறைகளும் மாற்றமடைந்து உருமாறிய பாறைகளாக மாறுகிறது. | காற்று, நீர், பனியாறுகளால் படியவைக்கப்பட்ட படிவுகள் நீண்ட காலமாக அதிக வெப்பநிலை மற்றும் அழுத்தம் காரணமாக படிவுப் பாறைகள் உருவாகின்றன. |
| இப்பாறைகள் படிகத் தன்மை கொண்டவை. | இப்பாறைகள் படிகங்களற்றவை. |
| கடினத்தன்மை கொண்டவை. | மென்தன்மையுடையவை. |

2. **மண்வள பாதுகாப்பு மற்றும் மண்ணரிப்பு.**

| மண்வள பாதுகாப்பு | மண்ணரிப்பு |
|---|---|
| மண் அரிப்பிலிருந்து பாதுகாத்து மண் வளத்தை மேம்படுத்தும் செயல்முறையாகும். | இயற்கை காரணிகள் மற்றும் மனித செயல்பாடுகளினால் மண்ணின் மேலடுக்கு அரிக்கப்படுவதால் மண்ணரிப்பு ஏற்படுகிறது. |
| காடுகள் வளர்த்தல், மேய்ச்சலைக் கட்டுப்படுத்துதல், அணைகளைக் கட்டுதல், பயிற்சுழற்சி முறை போன்ற முறைகளைக் கொண்டு மண் வளத்தைப் பாதுகாக்கலாம். | ஓடும் நீர் மற்றும் காற்று போன்றவை மண்ணரிப்புக்கான காரணங்கள். மரங்களை நடுதல் நீர்த்தேக்கங்கள் போன்றவற்றினால் மண்ணரிப்பு ஏற்படாமல் தடுக்கலாம். |

## IX. சுருக்கமாக விடையளி.

1. **தீப்பாறைகள் எவ்வாறு உருவாகின்றன?**
   - தீப்பாறைகள் புவியின் ஆழமானப் பகுதியிலிருந்து வெளியேறும் உருகிய பாறைக்குழம்பு உறைந்து உருவாகின்றன.
   - இப்பாறைகளிலிருந்து மற்ற பாறைகள் உருவாவதால் இவை முதன்மைப் பாறைகள் அல்லது தாய்ப்பாறைகள் என்று அழைக்கப்படுகிறது.

**2. பாறைகளின் கூட்டமைப்பு பற்றி விவரி.**

- பாறைகள் ஒன்று அல்லது பல கனிப் பொருட்களால் ஆனவை.
- இவை கனிமங்கள் தனித்த கூறுகளாகவோ அல்லது கூட்டுக் கலவையாகவோ உருவாகலாம்.

**3. 'பாறைகள்' வரையறு.**

- பாறைகள் என்பது திட கனிமப் பொருட்களால் புவியின் மேற்பரப்பில் மற்ற கோள்களில் உள்ளது போல் உருவானவையாகும்.
- புவியின் மேலோடு பாறைகளால் உருவானது. பாறைகள் ஒன்று அல்லது பல கனிமப்பொருட்களால் ஆனவை.
- இது திடநிலையிலுள்ள கடின மற்றும் மென்மைத் தன்மைக் கொண்ட ஒரு இயற்கை வளம் ஆகும்.

**4. மண்ணின் வகைகளைக் கூறுக.**

- வண்டல் மண்
- கரிசல் மண்
- செம்மண்
- சரளை மண்
- பாலை மண்
- மலை மண் போன்றவை.

**5. மண்வளப் பாதுகாப்பு என்றால் என்ன?**

- மண்வளப் பாதுகாப்பு என்பது மண் அரிப்பிலிருந்து மண் வளத்தை மேம்படுத்தும் செயல்முறையாகும்.

## X. விரிவான விடையளி.

**1. மண் உருவாக்கச் செயல்முறைகள் பற்றி விவரி.**

- மண் என்பது பல்வகை கரிமப்பொருட்கள், கனிமங்கள், வாயுக்கள், திரவப் பொருள்கள் மற்றும் பல உயிரினங்கள் கலந்த கலவையாகும்.
- உயிரினங்கள் வாழ துணைபுரிகிறது.
- மண்ணிலுள்ள கனிமங்கள் மண்ணை உருவாக்கும் ஒரு அடிப்படை காரணியாகும்.
- பாறைகள், வானிலை சிதைவு மற்றும் அரித்தல் செயல்முறைக்கு உட்படுத்தப்படும் போது மண்ணாக உருவாகிறது.
- காலப்போக்கில் இப்பாறைகள் உடைபட்டு மிருதுவான துகள்களாக மாறுகிறது.
- இந்தச் செயல்முறைகள் பாறைத் துகள்களிலிருந்து தாதுக்கள் வெளிப்படக் காரணமாகின்றன.

**2. பாறைகளை வகைப்படுத்தி விவரிக்கவும்.**

- பாறைகள் தோன்றும் முறையின் அடிப்படையில் அவற்றை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை.
    1. தீப்பாறைகள்
    2. படிவுப்பாறைகள்
    3. உருமாறியப் பாறைகள்

**(i) தீப்பாறைகள்**

- தீப்பாறைகள் புவியின் ஆழமானப் பகுதியிலிருந்து வெளியேறும் உருகிய பாறைக்குழம்பு உறைந்து உருவானதாகும். இவை இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை
    1. வெளிப்புறத் தீப்பாறைகள்
    2. ஊடுருவிய தீப்பாறைகள்

**(ii) படிவுப்பாறைகள்**

- படிவுப்பாறைகள் அரிப்பு காரணிகளால் அரிக்கப்பட்டு படிய வைக்கப்பட்ட படிவுகள் நீண்ட காலமாக அதிக வெப்பம் மற்றும் அழுத்தத்தின் காரணமாக இறுகியதால் படிவுப்பாறைகள் உருவாகின்றன. இவை மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
    1. உயிரினப் படிவுப் பாறைகள்
    2. பௌதீக படிவுப் பாறைகள்
    3. இரசாயன படிவுப் பாறைகள்

**(iii) உருமாறியப் பாறைகள்**

- அதிக வெப்பம், அழுத்தம் காரணமாக தீப்பாறைகளும், படிவுப்பாறைகளும் மாற்றமடைந்து உருமாறிய பாறைகளாக மாறுகிறது. அவை இரண்டு காரணிகளால் உருவாகின்றன. அவை
    1. வெப்ப உருமாற்றம்
    2. இயக்க உருமாற்றம்

**3. மண்ணடுக்குகள் பற்றி விவரிக்கவும்.**

| | **மண்ணின் அடுக்குகள்** |
|---|---|
| O – இலை மக்கு அடுக்கு | இலைகள், சருகுகள், கிளைகள், பாசிகள் போன்ற கரிமப் பொருட்களால் ஆனவை. |
| A - மேல்மட்ட அடுக்கு | கரிம மற்றும் கனிமப் பொருட்களால் ஆன அடுக்கு. |
| E - உயர்மட்ட அடுக்கு | அதிக அளவு சுவர்தலுக்கு உட்பட்ட அடுக்கு. களிமண், இரும்பு மற்றும் அலுமினிய ஆக்ஸைடு போன்ற தாதுக்கள் இவ்வடுக்கில் காணப்படுகின்றன. |
| B - அடி மண் | தாய்ப்பாறையின் இரசாயன அல்லது பௌதீக மாற்றத்திற்கு உட்பட்டவை |
| C - தாய்ப்பாறை அடுக்கு | இவ்வடுக்கில் தாய்ப்பாறைகள் குறைந்த அளவே சிதைக்கப்படுகிறது. |
| R - சிதைவடையாத தாய்ப்பாறை | இவ்வடுக்கு சிதைவடையாத அடிமட்ட பாறையாகும். |

**4. மண்ணினை வகைப்படுத்தி விவரிக்கவும்.**

**மண்ணின் வகைகள்:**

- வண்டல் மண்
- கரிசல் மண்
- செம்மண்
- சரளை மண்
- மலை மண்
- பாலை மண் போன்றவை

**வண்டல் மண்:**

- வண்டல் மண் ஆற்றுச் சமவெளிகள் மற்றும் கடற்கரைச் சமவெளிகளில் காணப்படுகிறது.
- வளம்மிக்க மண் வகையாகும்.
- இவற்றில் நெல், கோதுமை, கரும்பு மற்றும் சணல் போன்ற பயிர்கள் பயிரிடப்படுகின்றன.

**கரிசல் மண்:**

- தீப்பாறைகள் சிதைவடைவதால் கரிசல்மண் உருவாகின்றன.
- பருத்திப் பயிர் இவற்றில் நன்கு வளரும்.

**செம்மண்:**

- உருமாறியப் பாறைகள் மற்றும் படிகப் பாறைகள் சிதைவடைவதால் செம்மண் உருவாகிறது.
- இது வளம் குறைந்த மண்ணாகும்.
- இவற்றில் திணைப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன.

**சரளை மண்:**

- சரளை மண் அயனமண்டல பிரதேச காலநிலையில் உருவாகின்றது.
- தேயிலை, காப்பி போன்ற பயிர்கள் பயிரிடப்படுகின்றன.

**மலை மண்:**

- மலைச்சரிவுகளில் காணப்படுகின்றன.
- இப்பகுதியில் காரத்தன்மையுடன் குறைந்த பருமன் கொண்ட அடுக்காக உள்ளது.

**பாலை மண்:**

- அயனமண்டல பாலைவனப் பிரதேசங்களில் காணப்படுகின்றது.
- வளம் குறைந்த மண்ணாகும்.

---

## XI. செயல்பாடுகள் (மாணவர்களுக்கானது)

1. **இணையதள உதவியுடன் கீழ்க்கண்ட அட்டவணையைப் பூர்த்தி செய்யவும்.**

| பாறைகள் | உருவாகும் விதம் | பண்புகள் | எ.கா. | பயன்கள் |
|---|---|---|---|---|
| | | | | |

2. **வரைபடப் பயிற்சி**

**இந்திய புறவெளி நிலவரைபடத்தில் கரிசல் மண் காணப்படும் பகுதிகளைக் குறிக்கவும்.**

3. **கண்காட்சி**

**பல்வேறு வகையான மண் மாதிரிகளைச் சேகரித்து உன் வகுப்பறையில் காட்சிப்படுத்தவும்.**

4. **குழுக் கலந்துரையாடல்**


**இயற்கை மணலுக்கு மாற்றாக கட்டுமானப் பணிகளுக்கு "செயற்கை மணல்" (M-Sand) பயன்படுத்தக் காரணம்**

**1. தரம் - 2. நன்மைகள் - 3. தீமைகள் -**

# குடிமையியல்

## அலகு – 1

# மாநில அரசு எவ்வாறு செயல்படுகிறது




### கற்றலின் நோக்கங்கள்

இப்பாடத்தைக் கற்றுக்கொள்வதின் வாயிலாக மாணவர்கள் பின்வருவனவற்றில் அறிவைப் பெறுகின்றனர்.

- மாநில நிருவாகம்
- ஆளுநரின் அதிகாரம் மற்றும் பணிகள்
- முதலமைச்சரின் அதிகாரம் மற்றும் பணிகள்
- மாநில சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை
- மாநில நீதித்துறை.

QDUZO

### ✷ கற்றல் விளைவுகள்:

**SST 824** ➢ மத்திய (ம) மாநில அரசுகளை வேறுபடுத்துதல்.

**SST 827** ➢ சட்டம் இயற்றுதலில் உள்ள செயல்முறைகளை விவரித்தல்.

**SST 828** ➢ இந்தியாவில் நீதித்துறையின் செயல்பாடுகளைக் குறிப்பிடத்தக்க சில முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளை மேற்கோள்காட்டி விவரித்தல்

## மதிப்பீடு பக்கம் : 208

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. ஒரு மாநிலத்தின் ஆளுநர் யாரால் நியமிக்கப்படுகிறார்?

அ) குடியரசுத் தலைவர் ஆ) துணைக் குடியரசுத் தலைவர்

இ) பிரதம மந்திரி ஈ) முதலமைச்சர் [அ) குடியரசுத் தலைவர்]

2. மாநில அமைச்சரவைக் குழுவின் தலைவர்

அ) ஆளுநர் ஆ) முதலமைச்சர் இ) சபாநாயகர் ஈ) உள்துறை அமைச்சர்

[ஆ) முதலமைச்சர்]

3. மாநில சட்டமன்ற கூட்டத்தைக் கூட்டவும், ஒத்திவைக்கவும் அதிகாரம் பெற்றவர்

அ) உள்துறை அமைச்சர் ஆ) குடியரசுத் தலைவர்

இ) சபாநாயகர் ஈ) ஆளுநர் [ஈ) ஆளுநர்]

4. உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பதில் பங்கு பெறாதவர் யார்?

அ) ஆளுநர் ஆ) முதலமைச்சர்

இ) உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஈ) குடியரசுத் தலைவர் [ஆ) முதலமைச்சர்]

5. உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வு பெறும் வயது

அ) 62 ஆ) 64 இ) 65 ஈ) 58 [அ) 62]

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இந்தியாவில் உள்ள மொத்த மாநிலங்களின் எண்ணிக்கை __________ ஆகும். [29]
2. ஆளுநரின் பதவிக்காலம் __________ ஆண்டுகள் ஆகும். [5]
3. மாவட்ட நீதிபதிகள் __________ ஆல் நியமிக்கப்படுகின்றனர். [ஆளுநர்]
4. ஆளுநர் ஒரு மாநிலத்தின் __________ ஆவார். [நிர்வாகத் தலைவர்]
5. ஒருவர் சட்டப்பேரவை உறுப்பினராக __________ வயது நிறைவடைந்திருக்க வேண்டும். [25 வயது]

## III. பொருத்துக.

| I | | II | | விடைகள் | |
|---|---|---|---|---|---|
| 1. | ஆளுநர் | அ) | கீழவை | ஆ) | பெயரளவுத் தலைவர் |
| 2. | முதலமைச்சர் | ஆ) | பெயரளவுத் தலைவர் | ஈ) | உண்மையான தலைவர் |
| 3. | சட்டமன்ற பேரவை | இ) | மேலவை | அ) | கீழவை |
| 4. | சட்டமன்ற மேலவை | ஈ) | உண்மையான தலைவர் | இ) | மேலவை |

## IV. சரியா / தவறா எனக் குறிப்பிடுக.

1. முதலமைச்சர் மாநிலத்தின் தலைமை நிருவாகி ஆவார். [சரி]
2. ஆளுநர் சட்ட மன்றத்திற்கு இரண்டு ஆங்கிலோ இந்திய உறுப்பினர்களை நியமிக்கிறார். [தவறு]
3. உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை நிலையாகவும் ஒரே மாதிரியாகவும் இருப்பதில்லை. [சரி]

## V. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. **மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ளவர்களுள் யாரைத் தேர்ந்தெடுப்பதில் பங்கு பெறுகின்றனர்.**

**i.** குடியரசுத் தலைவர் **ii.** துணை குடியரசுத் தலைவர்

**iii.** ராஜ்ய சபை உறுப்பினர்கள் **iv.** சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள்

அ) i, ii & iii சரி ஆ) i மற்றும் iii சரி

இ) i, iii மற்றும் iv சரி ஈ) i, ii, iii மற்றும் iv சரி

**[இ) i, iii மற்றும் iv சரி]**

## VI. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வார்த்தைகளில் விடையளி.

1. **மாநில சட்டமன்றத்தின் இரு அவைகளின் பெயரை எழுதுக.**
   - சட்டமன்ற மேலவை
   - சட்டமன்ற கீழவை போன்றவையாகும்.

2. **மாநில சட்டமன்றப் பேரவை உறுப்பினராவதற்கு உள்ள தகுதிகள் யாவை?**
   - சட்டமன்றப் பேரவை உறுப்பினராக ஒருவர் 25 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்.
   - ஒருவர் ஒரே சமயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகளில் போட்டியிடலாம்.
   - இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்.
   - பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் உறுப்பினராக இருக்கக் கூடாது.

3. முதலமைச்சர் எவ்வாறு நியமிக்கப்படுகிறார்?

- ஆளுநர் மாநில சட்டமன்றத்தில் பெரும்பான்மை கொண்டுள்ள கட்சியின் தலைவரை மாநில முதலமைச்சராக நியமிக்கின்றார்.
- முதலமைச்சர் அமைச்சரவையின் தலைவர் ஆவார்.

4. மாநில அமைச்சரவைக் குழு எவ்வாறு உருவாக்கப்படுகிறது?

- முதலமைச்சர் அவரது கட்சி சட்டமன்ற உறுப்பினர்களிலிருந்து அமைச்சர்களை தேர்வு செய்கிறார்.
- முதல்வர் மற்றும் அவரது தலைமையிலான பல்வேறு துறை அமைச்சர்களும் கொண்ட அமைப்பு மாநில அரசாங்கம் என அழைக்கப்படுகிறது. இதுவே அமைச்சரவைக் குழுவாகும்.

## VII. விரிவான விடையளி.

1. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.

முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்

- முதலமைச்சர் மாநிலத்தின் தலைமை நிர்வாகி ஆவார்.
- மாநில அரசின் பல முக்கிய முடிவுகள் அவரது தலைமையின் கீழ் எடுக்கப்படுகின்றன.
- மாநில முதலமைச்சர் அமைச்சரவையை உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகிக்கிறார்.
- முதலமைச்சரின் ஆலோசனையின் பெயரில் அமைச்சர்களை ஆளுநர் நியமிக்கிறார்.
- மாநில அரசாங்கத்தின் கொள்கையை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறார்.
- பல்வேறு துறைகளைக் கண்காணித்து ஆலோசனை வழங்கி அவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறார்.
- மாநில அரசின் கொள்கைகள் மக்களுக்கு எதிராக இல்லாததை உறுதி செய்கிறார்.
- மாநில அரசின் கொள்கை முடிவுகளில் அவரது முடிவே இறுதியானது.
- முதலமைச்சர் மற்றும் அமைச்சரவையின் ஆலாசனையின்படி ஆளுநர் பல்வேறு உயர் அதிகாரிகளை நியமிக்கின்றார்.

2. மாநில சட்டமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி?

- மாநிலத்திற்கான சட்டங்களை இயற்றுவது சட்டமன்றத்தின் முக்கியப் பணி ஆகும்.
- அமைச்சரவை செயல்பாடுகளில் திருப்தி ஏற்படாவிட்டால் மாநில சட்டமன்றத்தில் ஒரு நம்பிக்கை இல்லா தீர்மானத்தை இயற்றி அமைச்சரவையை நீக்கம் செய்திடலாம்.
- சட்டமன்றம் இரண்டு அல்லது மூன்று முறை கூடும்.
- மாநில சட்டமன்றம் ஆனது மாநிலத்தின் நிதியைக் கட்டுப்படுத்துகிறது.
- சட்டமன்றத்தின் அனுமதி இல்லாமல் மாநில அரசு வரியினை விதிக்கவோ, அதிகரிக்கவோ, குறைக்கவோ அல்லது விலக்கிக் கொள்ளவோ இயலாது.
- அரசியலமைப்பைத் திருத்தும் சில நேர்வுகளில் சட்டமன்றம் பங்கு வகிக்கிறது.


3. உயர்நீதிமன்றத்தின் அதிகாரங்களையும், பணிகளையும் எழுதுக.

- அடிப்படை உரிமைகள் மற்றும் இதர நோக்கங்களை வலியுறுத்த உயர்நீதிமன்றம் பல விதமான நீதிப் பேராணைகளைப் பிறப்பிக்கின்றன.
- குறிப்பாக ஆட்கொணர்வு, தகுதி முறை வினவும், தடை உறுத்தும், கட்டளையிடும் மற்றும் ஆவணங்களை தாக்கல் செய்ய வலியுறுத்தும் நீதிப் பேராணை ஆகியவற்றைப் பிறப்பிக்கின்றன.
- மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்ட நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்துகிறது.
- உயர்நீதிமன்றம் உச்சநீதிமன்றத்தைப் போலவே வழக்குகள் பற்றிய பதிவேடுகளின் ஆதாரச் சான்றாக உள்ள பதிவுரு நீதிமன்றமாக விளங்குகிறது.
- குறிப்பாக அரசியலமைப்பின் பாதுகாப்பு என்பது நீதிமன்றங்கள் சுதந்திரமாக செயல்படுவதன் மூலமே உறுதி செய்யப்படுகிறது.

## VIII. செயல்திட்டம் மற்றும் செயல்பாடு (மாணவர்களுக்கானது)

1. தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களின் ஆளுநர்கள், முதலமைச்சர்களின் பெயர்களைப் பட்டியலிடுக.
2. தமிழ்நாட்டின் அமைச்சர்களின் பெயர்கள் மற்றும் அவர்கள் சார்ந்த துறைகளையும் பட்டியலிடுக.

states with bicameral legislature



# பொருளியல்

## அலகு – 1

# பணம், சேமிப்பு மற்றும் முதலீடுகள்



### கற்றலின் நோக்கங்கள்

- பணத்தின் பரிணாம வளர்ச்சி பற்றி தெரிந்து கொள்ளுதல்
- மதிப்பு, இயல்பு, செயல்பாடு மற்றும் பணத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி அறிந்து கொள்ளுதல்
- சேமிப்பு மற்றும் முதலீடு பற்றி புரிந்து கொள்ளுதல்
- கருப்புப் பணம் பற்றி தெரிந்துக் கொள்ளுதல்

LPIEA

### ✷ கற்றல் விளைவுகள்:

- கற்றல் விளைவுகள் பொருந்தவில்லை

### மதிப்பீடு பக்கம் : 280

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. உலோகப் பணத்திற்காக எந்த உலோகம் பயன்படுத்தப்பட்டன?

அ) தங்கம் ஆ) வெள்ளி இ) வெண்கலம் ஈ) மேற்கூறிய அனைத்தும்

[ஈ) மேற்கூறிய அனைத்தும்]

2. இந்திய ரூபாய் குறியீட்டினை (₹) வடிவமைத்தவர் யார்?
அ) உதயகுமார் ஆ) அமர்த்தியா சென்
இ) அபிஜித் பானர்ஜி ஈ) இவற்றில் எவரும் இல்லை **[அ) உதயகுமார்]**

3. பணத்தின் மதிப்பு
அ) அக பணமதிப்பு ஆ) புற பண மதிப்பு இ) அ மற்றும் ஆ ஈ) எதுவுமில்லை
**[இ) அ மற்றும் ஆ]**

4. வங்கிப் பணம் என்பது எது?
அ) காசோலை ஆ) வரைவு
இ) கடன் மற்றும் பற்று அட்டைகள் ஈ) மேற்கூறிய அனைத்தும்
**[ஈ) மேற்கூறிய அனைத்தும்]**

5. தவறான ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும். முதலீட்டுக் கருவி போன்றவைகள்
அ) பங்கு வர்த்தகம் ஆ) பத்திரங்கள் இ) பரஸ்பர நிதி ஈ) வரி செலுத்துவது
**[ஈ) வரி செலுத்துவது]**

6. பின்வருவனவற்றில் கருப்புப் பணம் குவிப்பதற்கு காரணமானவர்கள்
அ) வரி ஏய்ப்பவர்கள் ஆ) பதுக்குபவர்கள் இ) கடத்தல்காரர்கள் ஈ) மேற்கண்ட அனைத்தும்
**[ஈ) மேற்கண்ட அனைத்தும்]**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. நிகழ்நிலை வங்கியை ____________ என்று அழைக்கலாம். **[இணைய வங்கி ]**
2. பணம் எதையெல்லாம் செய்யவல்லதோ அதுவே ____________. **[பணம்]**
3. மின்னணு வங்கியை ____________ என்றும் அழைக்கலாம்.
**[தேசிய மின்னணு நிதி பரிமாற்றம் (NEFT)]**
4. கடன் அட்டைகள் மற்றும் பற்று அட்டைகள் ____________ பணமாகும். **[நெகிழிப்]**
5. இந்திய ரிசர்வ் வங்கி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு ____________. **[1935]**

## III. பொருத்துக.

| I | | II | | விடைகள் | |
|---|---|---|---|---|---|
| 1. | பண்டமாற்று முறை | அ) | வரி ஏமாற்றுபவர்கள் | ஈ) | பண்டங்களுக்கு பண்டங்கள் பரிமாற்றம் |
| 2. | இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் | ஆ) | மின்னணு பணம் | உ) | 1935 |
| 3. | மின் - பணம் | இ) | நுகர்வு தவிர்த்த வருமானம் | ஆ) | மின்னணு பணம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | சேமிப்பு | ஈ) | பண்டங்களுக்கு பண்டங்கள் பரிமாற்றம் | இ) | நுகர்வு தவிர்த்த வருமானம் |
| 5. | கருப்புப் பணம் | உ) | 1935 | அ) | வரி ஏமாற்றுபவர்கள் |

## IV. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வார்த்தையில் விடையளி.

1. 'பணம்' என்ற வார்த்தை எதன் மூலம் பெறப்பட்டது?
   - பணம் என்ற வார்த்தை ரோம் வார்த்தையான 'மொனேட்டா ஜீனோ' என்பதில் இருந்து பெறப்பட்டது.

2. இந்தியாவில் ரூபாய் நோட்டுக்களை அச்சிட்டு வெளியிடுவது யார்?
   - இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ரூபாய் நோட்டுக்களை அச்சிட்டு வெளியிடுகிறது.

## V. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

1. பண்டமாற்று முறையில் பல குறைபாடுகளாவன

I. இருமுகத்தேவை பொருத்தமின்மை
II. செல்வத்தைச் சேமிக்க சிரமமில்லை
III. பொதுவான மதிப்பின் அளவுகோல்
IV. பொருள்களின் பகுபடாமை

அ) I மற்றும் II சரி
ஆ) I மற்றும் IV சரி
இ) I, III மற்றும் IV சரி
ஈ) மேற்கூறிய அனைத்தும்

**[இ) I, III மற்றும் IV சரி]**

## VI. தவறான ஒன்றினைக் கண்டுபிடிக்கவும்.

1. பரிமாற்றத்திற்குப் பணத்தின் சமீபத்திய வடிவங்கள்

அ) கடன் அட்டை
ஆ) பண்டமாற்று முறை
இ) பற்று அட்டை
ஈ) நிகழ் நிலை வங்கி

**[ஆ) பண்டமாற்று முறை]**

2. பொருளாதாரத்தில் கருப்புப் பணத்தின் விளைவுகள்

அ) இரட்டை பொருளாதாரம்
ஆ) சமத்துவம் வலுவிழத்தல்
இ) உற்பத்தியில் விளைவுகள் இல்லை
ஈ) ஆடம்பர நுகர்வுச் செலவு

**[இ) உற்பத்தியில் விளைவுகள் இல்லை]**

## VII. கீழ்க்கண்ட வினாக்களுக்கு குறுகிய விடையளி.

1. பண்டமாற்று முறை என்றால் என்ன?
   - பண்டைய காலத்தில் பணத்தை பயன்படுத்தாமல் மனிதர்கள் பண்டங்களுக்கு பண்டங்களை பரிமாற்றம் செய்ததை பண்டமாற்று முறை என்கின்றனர்.
   - பண்டமாற்று முறை ஒரு பழைய பரிமாற்ற முறையாகும்.

2. அண்மை கால பணத்தின் வடிவங்கள் யாவை?

- பண்டப்பணம்
- உலோகப்பணம்
- காகித பணம்
- கடன் பணம்
- நிகர் பணம் போன்றவையாகும்.

---

3. மின்-வங்கி மற்றும் மின்-பணம் சிறு குறிப்பு வரைக.

மின்-வங்கி:

- காசோலை அல்லது ரொக்கத்தை விட ஒரு கணக்கிலிருந்து மற்றொரு கணக்கிற்கு நிதியை மாற்றுவதற்கு மின்னணு வழிமுறை பயன்படுகிறது.
- மின்னணு வங்கியை தேசிய மின்னணு பரிமாற்றம் (NEFT) என்றும் அழைக்கலாம்.

மின்-பணம்:

- வங்கியில் கணினி அமைப்புகளில் உள்ள மின்னணு முறையின் மூலம் பணம் பரிவர்த்தனை மேற்கொள்ளப்படுவது மின் பணம் எனப்படும்.

---

4. உனது வாழ்க்கையில் பணத்தின் முக்கியத்துவம் என்ன?

- பணம் என்பது நம் அன்றாட வாழ்வில் ஒரு முக்கிய அங்கமாகும்.
- குடும்பத்தின் அன்றாட தேவைகளுக்கும் கடன்களை அடைக்கவும், சேமிக்கவும், முதலீடு செய்யவும் உதவுகிறது.
- பணம் நமக்கு சுதந்திரம் மற்றும் பாதுகாப்பை அளிக்கிறது.
- நம் எதிர்காலத்தை திட்டமிட முடிகிறது.

---

5. பணத்தின் மதிப்பு என்றால் என்ன?

- பணத்தால் ஒரு நாட்டிலுள்ள பண்ட மற்றும் பணிகளை வாங்கும் சக்தியே பணத்தின் மதிப்பு ஆகும்.
- பண்டம் மற்றும் பணிகளின் விலையானது அதன் அளவைச் சார்ந்திருக்கும்.

---

6. சேமிப்பு மற்றும் முதலீடு என்றால் என்ன?

சேமிப்பு:

- வருவாயில் நடப்பு நுகர்வுக்கு பயன்படாத ஒரு பகுதி சேமிப்பு என வரையறுக்கப்படுகிறது.

முதலீடுகள்:

- பல்வேறு முறைகளில் மூலதனத்தை பயன்படுத்தும் முறையை முதலீடுகள் என அழைக்கின்றோம்.

---

7. கருப்புப் பணம் என்பதன் பொருள் என்ன?

- கருப்புப் பணம் என்பது அரசாங்கத்திற்கு செலுத்தாத எந்தவொரு பணத்தையும் குறிக்கும்.
- நாட்டின் ஒழுங்கு கட்டுப்படுத்துகையில் சட்ட விரோதமாக சம்பாதிக்கும் பணம் அனைத்தும் கருப்புப் பணம் ஆகும்.

8. பொருளாதாரத்தில் கருப்புப் பணத்தின் விளைவுகள் யாவை?

- இரட்டைப் பொருளாதாரம்
- உண்மை அளவைக் குறைத்து மதிப்பீடு செய்வது
- வரி ஏமாற்றுதல் மூலம் அரசுக்கு வருவாய் இழப்பு
- சமத்துவம் வலுவிழத்தல்
- பணக்காரர் மற்றும் ஏழைகளிடையே இடைவெளி அதிகரித்தல்
- ஆடம்பர நுகர்வு செலவு

## VIII. விரிவான விடையளி.

1. பண்டமாற்று முறையிலுள்ள தீமைகள் யாவை?

**பண்டமாற்று முறை**

- பண்டைய காலத்தில் பணத்தை பயன்படுத்தாமல் மனிதர்கள் பண்டங்களுக்குப் பண்டங்களை பரிமாற்றம் செய்ததை பண்டமாற்று முறை என்கின்றனர். இது ஒரு பழைய பரிமாற்ற முறையாகும்.

**தீமைகள்**

- இருமுகத் தேவை பொருத்தமின்மை
- பொதுவான மதிப்பின் அளவுகோல்
- பொருட்களின் பகுபடாமை
- செல்வத்தைச் சேமிப்பதற்கான சிரமங்கள் ஆகியன.

2. பணத்தின் பரிணாம வளர்ச்சி பற்றி எழுதுக.

- பணம் என்ற சொல்லானது ரோம் வார்த்தையான “மொனேட்டா ஜீனோ”விலிருந்து பெறப்பட்டது.
- இந்தியாவின் “ரூபாய்” என்ற சொல் சமஸ்கிருத வார்த்தையிலிருந்து பெறப்பட்டது.
- ‘ரூபியா’ என்றால் வெள்ளி நாணயம் என்பது பொருள்.
- இன்று நாம் காகித பணமாகவும், நாணயங்களாகவும் பயன்படுத்துகிறோம்.
- இந்த பரிணாம நிலையை அடைய ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆனது.
- பணத்தின் பரிணாமம் பல நிலைகளைக் கடந்துள்ளது. அதன் ஆரம்ப மற்றும் பழங்கால நிலைதான் பண்டமாற்று முறை ஆகும்.

3. **பணத்தின் பணிகள் யாவை? அவற்றை விளக்குக.**

**பணத்தின் பணிகள்:**

- முதன்மை அல்லது முக்கிய பணிகள்
- இரண்டாம் நிலை பணிகள்
- வரையறுக்கப்பட்ட பணிகள்

**1. முதன்மை அல்லது முக்கிய பணிகள்:**

**(i) பரிமாற்ற கருவி அல்லது பண செலுத்துகை**

- பணம், பண்ட மற்றும் பணிகளை வாங்கப் பயன்படுகிறது.

**(ii) மதிப்பின் அளவுகோல்**

- பண்டம் மற்றும் பணிகளின் மதிப்பை அளவிட பயன்படுகிறது.

**2. இரண்டாம் நிலை பணிகள்**

**(i) எதிர்கால செலுத்துகைக்கான நிலை மதிப்பு**

- எதிர்கால செலுத்துகைக்கு பணம் ஒரு கருவியாகப் பயன்படுகிறது.

**(ii) வாங்கும் சக்தியின் நிலைகலன்**

- பண்டமாற்று முறையில் சேமிப்பை ஊக்குவிப்பதில்லை.

**(iii) மாற்று மதிப்பு அல்லது மாற்று வாங்கும் சக்தி**

- பணத்தால் தொலைதூர இடங்கள், வெளிநாட்டிற்கும் பண்டங்கள் பரிமாற்றம் செய்ய முடியும்.

**3. வரையறுக்கப்பட்ட பணிகள்**

- கடன் அடிப்படையில் இயக்கப்படுகிறது.
- மூலதனத்தின் உற்பத்தித்திறன் அதிகரிப்பு.

---

4. **வங்கி வைப்புகளின் வகைகளை விவரி.**

**வங்கி வைப்புகளின் வகைகள்:**

- மாணவர் சேமிப்பு கணக்கு
- சேமிப்பு வைப்பு
- நடப்பு கணக்கு வைப்பு
- நிரந்தர வைப்பு

**(i) மாணவர் சேமிப்பு கணக்கு**

- சில வங்கிகள் பள்ளி, கல்லூரிகள் பயிலும் மாணவர்களுக்கு சேமிப்புக் கணக்கினை துவங்குவதற்கு வசதிகளை ஏற்படுத்தி வழங்குகின்றன.
- இந்தச் சேமிப்புக் கணக்கில் பூஜ்ய இருப்பினைக் கொள்வது இதன் முக்கிய அம்சமாகும்.

**(ii)** சேமிப்பு வைப்பு

- வாடிக்கையாளர் தன் வருமானத்தில் ஒரு பகுதியை சேமிப்பது சேமிப்பு வைப்பு ஆகும்.

**(iii)** நடப்பு கணக்கு வைப்பு

- வர்த்தக நிறுவனங்கள், வர்த்தகர்கள் மற்றும் பொது அதிகாரிகளால் ஆரம்பிக்கப்படுகிறது.

**(iv)** நிரந்தர வைப்பு

- நிரந்தர வைப்பு கணக்கு என்பது முதலீட்டாளர்கள் தங்கள் பணத்திற்கு பாதுகாப்பும், நிலையான வருவாயும் விரும்புவார்கள்.
- இது காலவைப்பு என்றும் அழைக்கப்படுகிறது.
- குறிப்பிட்ட காலத்திற்கு நிரந்தரமாக வங்கியில் இருக்கும்.

## IX. செய்முறைகள் மற்றும் செயல்பாடுகள் (மாணவர்களுக்கானது)

1. மாணவர்கள் இந்தியா மற்றும் மற்ற நாடுகளின் புதிய மற்றும் பழைய நாணங்களின் மாதிரிகளைக் கொண்ட அட்டவணையை தயாரிக்கக் கூறுதல்.
2. உங்கள் வீட்டிற்கு அருகாமையிலுள்ள தபால் நிலையத்திற்குச் சென்று இந்தியாவில் நடைமுறையிலுள்ள சேமிப்புத் திட்டத்தைப் பற்றி அறிந்து கொள்ளுதல், ஆசிரியர்கள் மாணவர்களுடன் சேமிப்புத் திட்டத்தைப் பற்றி கலந்துரையாடல்

## X. வாழ்வியல் திறன் (மாணவர்களுக்கானது)


1. பணத்தின் மதிப்பை அறிந்து கொள்ள மாணவர்கள் தங்கள் வகுப்பறையை கடை அல்லது அங்காடி போன்று அமைத்தல்.
2. மாணவர்களை கடையிலிருந்து சில பொருட்களை வாங்குமாறு கூறுதல் சந்தை செயல்களை மேற்கொள்ளுதல்.
3. ஆசிரியர் மற்றும் மாணவர்கள் பணத்தின் மதிப்பைப்பற்றி கலந்துரையாடல்.

மாதம் : ஜுன்

# வரலாறு

## 1. ஐரோப்பியர்களின் வருகை

1. இந்திய ஆறுகள் வரைபடத்தில் கீழ்க்கண்ட ஐரோப்பிய வர்த்தக மையங்களைக் குறித்து காட்டுக.
   1. கள்ளிக்கோட்டை, 2. கொச்சின், 3. மதராஸ், 4. பாண்டிச்சேரி, 5. சூரத், 6. சின்சுரா,
   7. பழவேற்காடு, 8. கல்கத்தா




மாதம் : ஜுன்

# புவியியல்

## 1. பாறை மற்றும் மண்

**வரைபடப் பயிற்சி**


இந்திய நில வரைபடத்தில் கரிசல் மண் காணப்படும் பகுதிகளைக் குறிக்கவும்.



மாதம் : டிசம்பர்

# 7. கண்டங்களை ஆராய்தல்
# (ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்டிகா)

**ஆஸ்திரேலியா** : பெரிய பிரிவு மலைத்தொடர், பெரிய பவளத் திட்டு, டாஸ்மேனியா, மகரரேகை, பசிபிக்பெருங்கடல், பெரிய ஆஸ்திரேலிய மணல் பாலைவனம், இந்தியப் பெருங்கடல், சிட்னி, கான்பெரா.



# மாதிரி காலாண்டு பொதுத் தேர்வு

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

**I. சரியான விடையை எழுதுக. 15x1=15**

1) இந்தியாவின் ஆங்கிலேயர்கள் கட்டிய முதல் கோட்டை ________
அ) வில்லியம் கோட்டை ஆ) செயின்ட் ஜார்ஜ் கோட்டை
இ) ஆக்ரா கோட்டை ஈ) டேவிட் கோட்டை

2) 1757 ஆம் ஆண்டில் வங்காளத்தை ஆட்சி செய்தவர்
அ) சுஜா-உத்-தௌலா ஆ) சிராஜ்-உத்-தௌவா
இ) மீர் காசிம் ஈ) திப்பு சுல்தான்

3) மகல்வாரி முறையில் 'மகல்' என்றால் என்ன?
அ) வீடு ஆ) நிலம் இ) கிராமம் ஈ) அரண்மனை

4) 'திருச்சிராப்பள்ளி பிரகடனம்' யாரால் வெளியிடப்பட்டது?
அ) மருது பாண்டியர்கள் ஆ) கிருஷ்ணப்ப நாயக்கர்
இ) வேலுநாச்சியார் ஈ) தீரன் சின்னமலை

5) ராணி லட்சுமிபாய் எப்பகுதியில் ஏற்பட்ட புரட்சியை வழி நடத்தினார்?
அ) மத்திய இந்தியா ஆ) டெல்லி இ) கான்பூர் ஈ) ப்ரெய்லி

6) உலக மண் நாளாக கடைப்பிடிக்கப்படும் நாள் ________
அ) ஆகஸ்ட் 15 ஆ) ஜனவரி 12 இ) அக்டோபர் 15 ஈ) டிசம்பர் 5

7) ________ என்ற கருவி ஈரப்பதத்தை அளக்கப் பயன்படுகிறது?
அ) காற்றுமானி ஆ) அழுத்தமானி இ) ஈரநிலைமானி ஈ) வெப்பமானி

8) புவியில் உள்ள நன்னீரின் சதவீதம் ________
அ) 71 % ஆ) 97 % இ) 2.8 % ஈ) 0.6 %

9) போரின் காரணமாக நடைபெறும் குடி பெயர்வு ________ ஐ சார்ந்தது.
அ) மக்களியல் ஆ) சமூக மற்றும் கலாச்சாரம்
இ) அரசியல் ஈ) பொருளாதாரம்

10) உயர்நீதிமன்றம் நீதிபதிகள் ஓய்வு பெறும் வயது ________
அ) 62 ஆ) 64 இ) 65 ஈ) 58

11) ஒரு மாநிலத்தின் ஆளுநர் யாரால் நியமிக்கப்படுகிறார்?
அ) குடியரசுத் தலைவர் ஆ) துணைக் குடியரசுத் தலைவர்
இ) பிரதம மந்திரி ஈ) இயல்பு குடியுரிமை மூலம்

12) கீழ்க்கண்டவைகளில் எந்த ஒன்று இந்தியக் குடியுரிமை பெறும் வழிமுறை அல்ல?
அ) பிறப்பின் மூலம் ஆ) சொத்துரிமை பெறுவதன் மூலம்
இ) வம்சாவழியின் மூலம் ஈ) இவற்றில் எவரும் இல்லை.

13) இந்திய அரசியலமைப்பின் முகவுரை திருத்தப்பட்ட ஆண்டு ________
அ) 1951 ஆ) 1976 இ) 1974 ஈ) 1967

14) இந்திய ரூபாய் குறியீட்டினை (₹) வடிவமைத்தவர் யார்?

அ) உதயகுமார் ஆ) அமர்த்தியா சென்

இ) அபிஜித் பானார்ஜி ஈ) இவற்றில் எவரும் இல்லை

15) வங்கி பணம் என்பது எது?

அ) காசோலை ஆ) வரைவு

இ) கடன் மற்றும் பற்று அட்டைகள் ஈ) மேற்கூறிய அனைத்தும்.

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக: 5x1=5

16) முகலாயப் பேரரசர் ______________ இந்தியாவில் ஆங்கிலேயர்கள் வர்த்தகம் செய்ய அனுமதி அளித்தார்.

17) இண்டிகோ (அவுரி) கிளர்ச்சி ______________ல் நடைபெற்றது.

18) நீர்ச்சுழற்சியில் ______________ நிலைகள் உள்ளன.

19) இந்திய அரசியலமைப்புச் சட்டம் ______________ குடியுரிமையை மட்டும் வழங்குகிறது.

20) இந்திய ரிசர்வ வங்கி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு ______________

## III. பொருத்துக : 5x1=5

21) நீல்தர்பன் - சமூக சீர்திருத்தவாதி

22) நிலக்கரி - வரி ஏமாற்றுபவர்கள்

23) இராஜாராம் மோகன்ராய் - மேகங்கள்

24) கருப்பு பணம் - ஆந்திரசைட்

25) நீர் சுருங்குதல் - இண்டிகோ விவசாயிகளின் துயரம்.

## IV. சரியா? தவறா?: 3x1=3

26) 1799 அக்டோபர் 17ம் நாள் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார்

27) படிவுப் பாறைகளைச் சுற்றி எரிமலைகள் காணப்படுகின்றன.

28) இந்திய நாட்டிற்கென ஒரு சமயம் உள்ளது.

## V. பின்வருவனவற்றில் சரியான கூற்றை தேர்வு செய்க: 2x1=2

29) 1. கவர்னர் நினோ டி குன்ஹா போர்ச்சுகீசிய தலைநகரை கொச்சியிலிருந்து, கோவாவிற்கு மாற்றினார்.

2. போர்ச்சுகீசியர்கள், இந்தியாவிலிருந்து கடைசியாக வெளியேறினர்.

3. டச்சுக்காரர்கள் சூரத்தில் தங்கள் முதல் வணிக மையத்தை நிறுவினர்.

4. இங்கிலாந்தின் மன்னர் முதலாம் ஜேம்ஸ், ஜஹாங்கீர் அவைக்கு சர் தாமஸ் ரோவை அனுப்பினார்.

அ) 1 மற்றும் 2 சரி ஆ) 2 மற்றும் 4 சரி

இ) 3 மட்டும் சரி ஈ) 1, 2 மற்றும் 4 சரி

30) தவறான இணையைக் கண்டுபிடிக்கவும் :

அ) மருது பாண்டியர் - எட்டயபுரம்

ஆ) கோபால நாயக்கர் - திண்டுக்கல்

இ) கேரள வர்மன் - மலபார்

ஈ) துண்டாஜி - மைசூர்

**VI. காரணம் கூறுக : (ஏதேனும் 2 மட்டும்) 2x2=4**

31) தீப்பாறை எரிமலை பகுதியில் காணப்படுகிறது.

32) உயரம் அதிகரிக்கும் போது வெப்பம் குறைகிறது.

33) நீர் புகாத இடங்களில் நீரின் ஊடுருவல் குறைவாக உள்ளது.

**VII. வேறுபடுத்துக : (ஏதேனும் 3 மட்டும்) 3x2=6**

34) உருமாறிய பாறைகள் மற்றும் படிவுப் பாறைகள்

35) காலநிலை மற்றும் வானிலை

36) கோள் காற்று மற்றும் பருவகாலக் காற்று

37) மண்வள பாதுகாப்பு மற்றும் மண்ணரிப்பு

**VIII. கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமான விடையளி : (ஏதேனும் 10 மட்டும்) 10x2=20**

38) இந்தியாவில் இருந்து ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்களைக் குறிப்பிடுக.

39) இருட்டறை துயரச் சம்பவம் பற்றி குறிப்பு வரைக.

40) இரயத்துவாரி முறையின் சிறப்பு கூறுகள் யாவை?

41) 1857ம் ஆண்டு புரட்சிக்கான உடனடிக் காரணம் என்ன?

42) தீப்பாறைகள் எவ்வாறு உருவாகின்றன?

43) "வெயிற் காய்வு" என்றால் என்ன?

44) நீர் சுழற்சி - வரையறு.

45) உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட நான்கு பெருநகரங்களைப் பட்டியலிடுக.

46) மாநில சட்டமன்றத்தின் இரு அவைகளின் பெயரை எழுதுக.

47) குடியுரிமையின் வகைகளை குறிப்பிடுக.

48) சமய சார்பற்ற நாட்டின் சிறப்புப் பண்புக்கூறுகள் யாவை?

49) பண்டமாற்று முறை என்றால் என்ன?

50) பொருளாதாரத்தில் கருப்பு பணத்தின் விளைவுகள் யாவை?

**IX. கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவான விடையளி : (ஏதேனும் 5 மட்டும்) 5x5=25**

51) நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் பற்றி குறிப்பிடுக.

52) நிலையான நிலவரி திட்டத்தின் நிறை, குறைகளை விவாதிக்க

53) 1857 ஆம் ஆண்டு புரட்சியின் தோல்விக்கான காரணங்களை எழுதுக.

54) மண்ணடுக்குகள் பற்றி விவரிக்கவும்.

55) நகரமயமாதலினால் ஏற்படும் சவால்களை ஆராய்க.

56) மழைப்பொழிவின் பல வகைகளை விவரி

57) முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி

58) பண்டமாற்று முறையின் தீமைகள் யாவை?

59) ஒருவருக்கு எதன் அடிப்படையில் இந்தியக் குடியுரிமை இரத்து செய்யப்படுகிறது?

**60) கீழ்க்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.** **7x1=7**

1. கல்கத்தா 2. டெல்லி 3. பாராக்பூர் 4. கள்ளிக்கோட்டை
5. கொச்சி 6. மதராஸ் 7. ஆக்ரா

**61) கீழ்க்கண்ட இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்.** **8x1=8**

1. பசிபிக் பெருங்கடல் 2. நிலநடுக்கோடு 3. ஆர்டிக் வட்டம்
4. இந்தியா 5. புதுடெல்லி 6. தென் அமெரிக்கா
7. டோக்கியோ 8. இலண்டன்.

## மாதிரி அரையாண்டு பொதுத் தேர்வு

**நேரம் : 3.00 மணி** **மதிப்பெண்கள் : 100**

**I. சரியான விடையை எழுதுக.** **15x1=15**

**1) 1453 ஆம் ஆண்டு கான்ஸ்டாண்டி நோபிள் யாரால் கைப்பற்றப்பட்டது?**

அ) பிரான்ஸ் ஆ) துருக்கி
இ) நெதர்லாந்து (டச்சு) ஈ) பிரிட்டன்

**2) மராத்திய பேரரசின் கடைசி பீஷ்வா ______________**

அ) பாலாஜி விஸ்வநாத் ஆ) இரண்டாம் பாஜிராவ்
இ) பாலாஜி பாஜிராவ் ஈ) பாஜிராவ்

**3) மகல்வாரி முறை எந்தப் பகுதியில் செய்து கொள்ளப்பட்டது.**

அ) மகாராஷ்டிரா ஆ) மதராஸ் இ) வங்காளம் ஈ) பஞ்சாப்

**4) உலக மண் நாளாக கடைப்பிடிக்கப்படும் நாள் ______________**

அ) ஆகஸ்ட் 15 ஆ) ஜனவரி 12 இ) அக்டோபர் 15 ஈ) டிசம்பர் 5

5) ______________ ஒரு பகுதியின் சராசரி வானிலையைக் குறிப்பதாகும்.

அ) புவி ஆ) வளிமண்டலம் இ) காலநிலை ஈ) சூரியன்

6) புவியில் உள்ள நன்னீரின் சதவிகிதம் ______________

அ) 71 % ஆ) 97 % இ) 2.8 % ஈ) 0.6 %

7) மாநில சட்டமன்ற கூட்டத்தை கூட்டவும், ஒத்தி வைக்கவும் அதிகாரம் பெற்றவர்

அ) உள்துறை அமைச்சர் ஆ) குடியரசுத் தலைவர்

இ) சபாநாயகர் ஈ) ஆளுநர்

8) இந்தியாவின் முதல் குடிமகன் யார்?

அ) பிரதமர் ஆ) குடியரசுத் தலைவர்

இ) முதலமைச்சர் ஈ) இந்திய தலைமை நீதிபதி

9) தேசிய மனித உரிமைகள் ஆணையம் நிறுவப்பட்ட ஆண்டு

அ) 1951 ஆ) 1976 இ) 1974 ஈ) 1967

10) தேசிய மனித உரிமைகள் ஆணையம் நிறுவப்பட்ட ஆண்டு

அ) 1990 ஆ) 1993 இ) 1978 ஈ) 1979

11) பணத்தின் மதிப்பு ______________

அ) அகபண மதிப்பு ஆ) புற பண மதிப்பு இ) அ மற்றும் ஆ ஈ) எதுவுமில்லை

12) காலின் ஜாக்சன் எந்தப் பகுதியில் ஆட்சியாளர்?

அ) மதுரை ஆ) திருநெல்வேலி இ) இராமநாதபுரம் ஈ) தூத்துக்குடி

13) இந்தியாவில் நவீன கல்வி முறையைத் தொடங்கிய முதல் ஐரோப்பிய நாடு எது?

அ) இங்கிலாந்து ஆ) டென்மார்க் இ) பீகார் ஈ) போர்ச்சுகல்

14) கம்பளி மற்றும் தோல் தொழிற்சாலைகள் காணப்படும் முக்கிய இடம் ______________

அ) பம்பாய் ஆ) அகமதாபாத் இ) கான்பூர் ஈ) டாக்கா

15) ஆன்ந்த பால் பண்ணைத் தொழிலகம் (அமுல்) ______________ துறைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அ) தனியார் துறை ஆ) பொதுத்துறை இ) கூட்டுறவுத் துறை ஈ) கூட்டுத்துறை

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக: 10x1=10

1) ______________ என்ற டென்மார்க் மன்னர் டேனிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தை உருவாக்க ஒரு பட்டயத்தை வெளியிட்டார்

2) 1800 ஆம் ஆண்டு கல்கத்தாவில் உள்ள வில்லியம் கோட்டையில் ஒரு கல்லூரியை நிறுவியவர் ______________

3) சம்பரான் விவசாயச் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு ______________

4) 1857 ஆம் ஆண்டு புரட்சியை ______________ என்பவர் 'முதல் இந்திய சுதந்திரப் போர்' என விவரிக்கிறார்.

5) பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு ______________

6) ______________ பாறை முதன்மை பாறை என்று அழைக்கப்படுகிறது.

7) ஒருவர் சட்டப் பேரவை உறுப்பினராக ______________ வயது நிறைவடைந்திருக்க வேண்டும்.

8) ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்ட ஆண்டு ______________

9) பணம் எதையெல்லாம் செய்யவல்லதோ அதுவே ______________

10) மூடுபனி ______________ ஐ விட அதிக அடர்த்தி கொண்டது.

**III. பொருத்துக: 10x1=10**

| | | | |
|---|---|---|---|
| 1) | டச்சுக்காரர்கள் | - | இரண்டாம் பகதூர்ஷா |
| 2) | அய்-லா-சப்பேல் | - | சீன அறிஞர் |
| 3) | இரயத்துவாரி முறை | - | 1602 |
| 4) | டெல்லி உடன்படுக்கை | - | முதல் கர்நாடாகப் போர் |
| 5) | இட்சிங் | - | மதராஸ் |
| 6) | தவர்னியர் | - | அடியாழப் பாறைகள் |
| 7) | கிரானைட் | - | மனித உரிமைகளுக்கான ஆணையம் |
| 8) | ஆளுநர் | - | பிரெஞ்சு பயணி |
| 9) | எலினார் ரூஸ்வெல்ட் | - | பண்டங்களுக்கு பண்டங்கள் பரிமாற்றம் |
| 10) | பண்டமாற்று முறை | - | பெயரளவு தலைவர் |

**IV. சரியா தவறா காண்க: 5x1=5**

1) 1948ம் ஆண்டு தொழிலக கொள்கையானது கலப்பு பொருளாதாரத்தை கொண்டு வந்தது

2) அடிப்பரப்பு நீர் வழிந்தோடல் பொதுவாக இடைநீர் ஓட்டம் எனக் குறிப்பிடப்படுகிறது.

3) பாதிக்கப்பட்டவர்களுக்குத் தண்டனை வழங்க தேசிய மனித உரிமைகள் ஆணையம் அதிகாரம் பெற்றுள்ளது.

4) RMSA திட்டமானது பத்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் செயல்படுத்தப்பட்டது.

5) பிளாசிப் போரில் ஆங்கிலப் படையை வழி நடத்தியவர் ஹெக்டர் மன்றோ ஆவார்.

**V. ஏதேனும் 10 வினாக்களுக்கு விடையளி: 10x2=20**

1) பிளாசிப் போருக்குப் பின் ஆங்கிலேயர்கள் பெற்ற சலுகைகள் யாவை?

2) திருச்சிராப்பள்ளி பிரகடனத்தின் முக்கியத்துவம் யாது?

3) பனி உருவாக்கம் எவ்வாறு நடைபெறுகிறது?

4) முக்கிய பொருளாதார நடவடிக்கைகளின் பெயர்களை எழுதுக.

5) மாநில சட்டமன்றத்தின் இரு அவைகளின் பெயரை எழுது.

6) ஓர் இந்தியக் குடிமகன் நமது நாட்டில் அனுபவிக்கும் உரிமைகள் யாவை?

7) அண்மை கால பணத்தின் வடிவங்கள் யாவை?

8) ஆவணக் காப்பகங்கள் பற்றி சிறுகுறிப்பு தருக.

9) மகல்வாரி முறையின் விளைவுகளைக் கூறுக.

10) SSA மற்றும் RMSA விரிவாக்கம் தருக.

11) பெரிய அளவில் நெசவு உற்பத்திக்கு பயன்படுத்திய கண்டுபிடிப்புகளின் பெயர்களை எழுது.

12) தீப்பாறைகள் எவ்வாறு உருவாகின்றன?

13) இடம் பெயர்தல் – வரையறு

14) சமயச் சார்பின்மை என்பது எதனைக் குறிக்கிறது.

**VI. ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விரிவான விடையளி: 6x5=30**

1) ஆங்கிலேயர்கள் எவ்வாறு இந்தியாவில் தங்களது வர்த்தக மையங்களை நிறுவினர்?

2) இந்தியத் தொழில்மயம் அழிதலுக்கு பிரிட்டிஷாரின் வர்த்தகக் கொள்கை எவ்வாறு காரணமானது?

3) வேறுபடுத்துக : உருமாறிய பாறைகள் மற்றும் படிவுப் பாறைகள்

4) வேறுபடுத்துக : வெள்ளப்பெருக்கு மற்றும் வறட்சி

5) முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி

6) மனித உரிமைகள் மற்றும் வாழ்வியல் உரிமைகளை வேறுபடுத்துக.

7) பண்டமாற்று முறையிலுள்ள தீமைகள் யாவை?

8) பணத்தின் பணிகள் யாவை?

**VII. கொடுக்கப்பட்ட இந்திய வரைபடத்தில் குறிக்கவும். 10x1=10**

1) ஆக்ரா

2) மதராஸ்

3) அகமதாபாத்

4) பம்பாய்

5) கோவா

6) காரைக்கால்

7) கொச்சி

8) மைசூர்

9) குவாலியர்

10) இந்தியப் பெருங்கடல்

# மாதிரி முழு ஆண்டுத் தேர்வு - I

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

**I. சரியான விடையை எழுதுக. 15x1=15**

1) இந்தியாவில் ஆங்கிலேயர்கள் கட்டிய முதல் கோட்டை ______________

அ) வில்லியம் கோட்டை ஆ) செயின்ட் ஜார்ஜ் கோட்டை

இ) ஆக்ரா கோட்டை ஈ) டேவிட் கோட்டை

2) துணைப்படைத் திட்டத்தில் இணைத்துக் கொண்ட முதல் இந்திய அரசு எது?

அ) அயோத்தி ஆ) ஹைதராபாத் இ) உதய்பூர் ஈ) குவாலியர்

3) வேலுநாச்சியார் எப்பகுதியின் ராணி ஆவார் ______________

அ) நாகலாபுரம் ஆ) சிவகிரி இ) சிவகங்கை ஈ) விருப்பாச்சி

4) இந்தியாவில் புதிய கல்விக் கொள்கை எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது ____________

அ) 1992 ஆ) 2009 இ) 1986 ஈ) 1968

5) இந்தியாவின் முதல் பெண் மருத்துவர் ______________

அ) தர்மாம்பாள் ஆ) முத்துலட்சுமி அம்மையார்

இ) மூவலூர் ராமாமிர்தம் ஈ) பண்டித ரமாபாய்

6) பருத்தி வளர ஏற்ற மண் ______________

அ) செம்மண் ஆ) கரிசல் மண் இ) வண்டல் மண் ஈ) மலை மண்

7) போரின் காரணமாக நடைபெறும் இடப்பெயர்வு ______________ ஐ சார்ந்தது.

அ) மக்களியல் ஆ) சமூக மற்றும் கலாச்சாரம்

இ) அரசியல் ஈ) பொருளாதாரம்

8) இந்தியப் பெருங்கடலில் சுனாமி ______________ ஆம் ஆண்டில் ஏற்பட்டது.

அ) 1990 ஆ) 2004 இ) 2005 ஈ) 2008

9) ஆழம் குறைந்த நீர் பகுதிகள் ______________ வண்ணம் மூலம் குறிப்பிடப்படுகிறது.

அ) மஞ்சள் ஆ) பழுப்பு இ) வெளிர் நீலம் ஈ) அடர் நீலம்

10) உலக மனித உரிமைகள் தினமாக அனுசரிக்கப்படும் நாள் ______________

அ) டிசம்பர் 9 ஆ) டிசம்பர் 10 இ) டிசம்பர் 11 ஈ) டிசம்பர் 12

11) அவசர காலத்தில் அவசர சிகிச்சை ஊர்தி சேவைக்காக அழைக்க வேண்டிய எண் ______

அ) 108 ஆ) 100 இ) 106 ஈ) 101

12) உச்ச நீதிமன்றம் அமைந்துள்ள இடம் ______________

அ) சண்டிகர் ஆ) பம்பாய் இ) கல்கத்தா ஈ) புதுடெல்லி

13) இந்திய வெளியுறவுக் கொள்கையானது பல்வேறு கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. அவைகளுள் ஒன்று ______________

அ) சத்தியமேவ ஜெயதே ஆ) பஞ்சசீலம்

இ) மேற்கூறிய இரண்டும் ஈ) மேற்கூறிய எவையுமில்லை

14) வங்கி பணம் என்பது எது?

அ) காசோலை ஆ) வரைவு

இ) கடன் மற்றும் பற்று அட்டைகள் ஈ) மேற்கூறிய அனைத்தும்.

15) பொதுத்துறை ______________ உடையது.

அ) இலாப நோக்கம் ஆ) சேவை நோக்கம்

இ) ஊக வணிக நோக்கம் ஈ) இவற்றில் எதுவுமில்லை.

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக: 5x1=5**

16) தொழிற்புரட்சி நடைபெற்ற இடம் ______________

17) செர்னோபில் அணு விபத்து ______________ ஆண்டில் நடைபெற்றது.

18) இந்திய கடற்படையின் தலைமை தளபதி ______________ ஆவார்

19) நிகழ்நிலை வங்கியை ______________ என்று அழைக்கலாம்.

20) ______________ என்பது ஒரு சமூகத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியின் செயல்முறையாகும்.

**III. பொருத்துக : 5 x 1 = 5**

21) டாக்கா - மொத்த உள்நாட்டு உற்பத்தி

22) அபாயகர கழிவுகள் - 8 உறுப்பினர்கள்

23) ஆளுநர் - காலாவதியான மருந்துகள்

24) சார்க் - மஸ்லின் துணி

25) GDP - பெயரளவுத் தலைவர்

**IV. சரியா? தவறா?: 4x1=4**

26) காரன் வாலிஸ் பிரபு காவல்துறையை உருவாக்கினார்.

27) 1799 அக்டோபர் 17ம் நாள் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார்

28) மொகலாய பேரரசர் அக்பர் சமயச் சகிப்புத் தன்மைக் கொள்கையை பின்பற்றினார்

29) பாதை தடத்தை மாற்றும் முன்பு கண்ணாடியினை பார்க்க வேண்டும்.

**V. பின்வருவனவற்றுள் சரியானவற்றைத் தேர்ந்தெடு: 2x2=4**

30) பண்டமாற்று முறையில் பல குறைபாடுகளாவன:

I. **இருமுகத்தேவை பொருத்தமின்மை**

II. **செல்வத்தை சேமிக்க சிரமமில்லை**

III. **பொதுவான மதிப்பின் அளவுகோல்**

IV. **பொருட்களின் பகுபடாமை**

அ) I மற்றும் II சரி ஆ) I மற்றும் IV சரி

இ) I, III மற்றும் IV சரி ஈ) மேற்கூறிய அனைத்தும்.

31) தவறான இணையை கண்டுபிடிக்கவும்:

அ) தீன் இலாகி - ஒரு புத்தகம்

ஆ) கஜீராஹோ - இந்து கோவில்

இ) அசோகர் - பாறைக்கல்வெட்டு

ஈ) இக்பால் - கவிஞர்

**VI. காரணம் கூறுக (ஏதேனும் 3 மட்டும்): 3x2=6**

32) உயரம் அதிகரிக்கும் பொழுது வெப்பம் குறைகிறது.

33) புவியில் நன்னீர் குறைவாக உள்ளது.

34) எகிப்து நைல் நதியின் நன்கொடை என அழைக்கப்படுகிறது. ஏன்?

35) அண்டார்டிகா ஆராய்ச்சியார்களின் கண்டம் என அழைக்கப்படுகிறது. ஏன்?

36) நீர்த்தேக்கப் படுகைகளில் இரசாயன படிவப் பாறைகள் காணப்படுகின்றன.

**VII. வேறுபடுத்துக (ஏதேனும் 4 மட்டும்): 4x2=8**

37) மண்வள பாதுகாப்பு மற்றும் மண்ணரிப்பு

38) காலநிலை மற்றும் வானிலை

39) இடர் மற்றும் பேரிடர்

40) வெள்ளப் பெருக்கு மற்றும் வறட்சி

41) வேளாண் சார்ந்த தொழிலகங்கள் மற்றும் கடல்வளம் சார்ந்த தொழிலகங்கள்

42) பெரிய அளவை மற்றும் சிறிய அளவை புவிப்படங்கள்

**VIII. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும் (ஏதேனும் 10 மட்டும்): 10x2=20**

43) இந்தியாவில் இருந்த ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்களைக் குறிப்பிடுக.

44) இரயத்துவாரி முறையின் சிறப்புக் கூறுகள் யாவை?

45) தட்சசீலம் பற்றி சிறுகுறிப்பு எழுதுக?

46) இடைக்கால இந்தியாவில் குறிப்பிடத்தக்க பெண்கள் யாவர்?

47) மண்ணின் வகைகளைக் கூறுக?

48) நகரமயமாக்கம் என்றால் என்ன?

49) தொழிலக அமைவிடத்திற்கு காரணமான காரணிகளைக் குறிப்பிடுக?

50) இயற்கையமைப்பு புவிப்படம் என்றால் என்ன?

51) நற்குடிமகனின் மூன்று பண்புகளை குறிப்பிடுக?

52) பெண்களின் நலனைப் பாதுகாப்பதற்காக நிறைவேற்றப்பட்ட மூன்று சட்டங்களைக் குறிப்பிடுக?

53) போக்குவரத்து சமிக்ஞைகளின் விளக்குகளின் படம் வரைந்து அதன் பொருளைக் குறிப்பிடுக?

54) கருப்புப் பணம் என்றால் என்ன?

55) சமுதாய தேவை என்றால் என்ன?

**IX. விரிவான விடையளி (ஏதேனும் 4 மட்டும்): 4x5=20**

56) 1857ம் ஆண்டு புரட்சியின் தோல்விக்கான காரணங்களை எழுதுக?

57) சீர்திருத்த இயக்கத்தின் தாக்கம் குறித்து விரிவாக விடையளிக்கவும்?

58) வெப்பநிலை எவ்வாறு அளவிடப்படுகிறது?

59) நில அதிர்வை வரையறுத்து அதன் விளைவுகளை பட்டியலிடுக?

60) மரபுக் குறியீடுகள் மற்றும் சின்னங்கள் குறித்து ஒரு பத்தி எழுதுக?

61) முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி?

62) சாலை விபத்துக்களுக்கான காரணங்களை விவரி?

63) பொதுத் துறைக்கும், தனியார் துறைக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

**X. 64) இந்திய வரைபடத்தில் குறிக்கவும் 5x1=5**

டெல்லி, பாரக்பூர், விக்கிரமசீலா, வங்காள விரிகுடா, அகமதாபாத்

**65) உலக வரைபடத்தில் குறிக்கவும் 10x1=10**

டோக்கியோ, மெக்ஸிகோ நகரம், லண்டன், சீனா, பசிபிக் பெருங்கடல், ரஷ்யா, இந்தோனேசியா, செங்கடல், மத்திய தரைக் கடல் சகாரா பாலைவனம்.

---

## மாதிரி முழு ஆண்டுத் தேர்வு - II

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 15x1=15**

1) இந்தியாவில் ஆங்கிலேயர்கள் கட்டிய முதல் கோட்டை

அ) வில்லியம் கோட்டை ஆ) செயிண்ட் ஜார்ஜ் கோட்டை

இ) ஆக்ரா கோட்டை ஈ) டேவிட் கோட்டை

2) பிளாசிப்போர் நடைபெற்ற ஆண்டு

அ) 1757 ஆ) 1764 இ) 1765 ஈ) 1775

3) மகல்வாரி முறையில் 'மகல்' என்றால் என்ன?

அ) வீடு ஆ) நிலம் இ) கிராமம் ஈ) அரண்மனை

4) ராணி லட்சுமிபாய் எப்பகுதியில் ஏற்பட்ட புரட்சியை வழி நடத்தினார்

அ) மத்திய இந்தியா ஆ) டெல்லி இ) கான்பூர் ஈ) ப்ரெய்லி

5) வேதம் என்ற சொல் ______________ லிருந்து வந்தது

அ) சமஸ்கிருதம் ஆ) இலத்தீன் இ) பிராகிருதம் ஈ) பாலி

6) 'சதி' எனும் நடைமுறை ஒழிக்கப்பட்ட ஆண்டு

அ) 1827 ஆ) 1828 இ) 1829 ஈ) 1830

7) உலக மண் நாளாக கடைபிடிக்கப்படும் நாள் ____________

அ) ஆகஸ்ட் 15 ஆ) ஜனவரி 12 இ) அக்டோபர் 15 ஈ) டிசம்பர் 5

8) புவி பெறும் ஆற்றல் ____________

அ) நீரோட்டம் ஆ) அலைகள்

இ) வெப்பம் ஈ) மின்காந்த அலைகள்

9) புவியில் உள்ள நன்னீரின் சதவீதம் ____________

அ) 71 % ஆ) 97 % இ) 2.8 % ஈ) 0.6 %

10) சுனாமி என்ற சொல் ____________ மொழியிலிருந்து பெறப்பட்டது.

அ) ஹிந்தி ஆ) பிரெஞ்சு இ) ஜப்பானிய ஈ) ஜெர்மன்

11) கல்கூர்லி சுரங்கம் ____________ கனிமத்திற்குப் புகழ்பெற்றது.

அ) வைரம் ஆ) பிளாட்டினம் இ) வெள்ளி ஈ) தங்கம்

12) மாநில அமைச்சரவைக் குழுவின் தலைவர்

அ) ஆளுநர் ஆ) முதலமைச்சர்

இ) சபாநாயகர் ஈ) உள்துறை அமைச்சர்

13) உலக மனித உரிமைகள் தினமாக அனுசரிக்கப்படும் நாள் ____________

அ) டிசம்பர் 9 ஆ) டிசம்பர் 10 இ) டிசம்பர் 11 ஈ) டிசம்பர் 12

14) இந்தியாவின் மிக உயர்ந்த மற்றும் இறுதியான நீதித்துறை

அ) குடியரசுத் தலைவர் ஆ) நாடாளுமன்றம்

இ) உச்ச நீதிமன்றம் ஈ) பிரதம அமைச்சர்

15) இந்திய ரூபாய் குறியீட்டினை (₹) வடிவமைத்தவர்?

அ) உதயகுமார் ஆ) அமர்த்தியாசென்

இ) அபிஜித் பானர்ஜி ஈ) இவற்றில் எவரும் இல்லை

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக: 5x1=5**

16) இந்தியாவில் தேசிய ஆவணக்காப்பகம் ____________ ல் அமைந்துள்ளது.

17) ____________ தமிழர்களால் வீரமங்கை எனவும் தென்னிந்தியாவின் ஜான்சிராணி எனவும் அறியப்பட்டவர்

18) இந்தியாவின் ____________ மாநகரம் உலகிலேயே இரண்டாவது அதிக நகர மக்கள் தொகையைக் கொண்டது.

19) மூலப்பொருட்களின் அடிப்படையில் பருத்தி நெசவாலை ____________ ஒரு தொழிலாகும்.

20) இந்திய ரிசர்வ் வங்கி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு ____________

**III. பொருத்துக:** 5x1=5

| | | |
|---|---|---|
| 21) பாரிஸ் உடன்படிக்கை | - | முதன்மை துறைகள் |
| 22) ஜான்சி | - | உண்மையான தலைவர் |
| 23) முதலமைச்சர் | - | வாக்களிக்கும் உரிமை |
| 24) வாழ்வியல் உரிமைகள் | - | லட்சுமி பாய் |
| 25) வேளாண்மை | - | மூன்றாம் கர்நாடகப்போர் |

**IV. சரியா? தவறா?:** 4x1=4

26) நாணயங்கள் பயன்பாட்டுபொருள் ஆதாரங்களுள் ஒன்று

27) இந்தியாவில் ஆங்கிலேயர்களால் இரயில்வே அறிமுகப்படுத்தப்பட்டது.

28) மதராஸ் 1998ல் அதிகாரபூர்வாக சென்னை என மறு பெயரிடப்பட்டது.

29) ரிக் வேத காலத்தில் பெண்கள் கௌரவிக்கப்பட்டனர்.

**V. பின்வருவனவற்றுள் சரியானவற்றைத் தேரந்தெடு:** 2x1=2

30) i) பேகம் ஹஸ்ரத் மஹால், ராணி லட்சுமிபாய் ஆகியோர் ஆங்கியோர் மீது ஆயுதமேந்திய கிளர்ச்சியில் ஈடுபட்டனர்

ii) தமிழநாட்டின் சிவகங்கையைச் சேர்ந்த வேலுநாச்சியார் பிரிட்டிஷாருக்கு எதிராக வீரமாக போராடினார்.

**மேலே கொடுக்கப்பட்ட எந்த வாக்கியங்கள் சரியானவை?**

அ) (i) மட்டும் ஆ) (ii) மட்டும் இ) (i) மற்றும் (ii) ஈ) இரண்டுமில்லை

31) **தவறான இணையை கண்டுபிடிக்கவும்:**

| | | |
|---|---|---|
| மருது பாண்டியர்கள் | - | எட்டையாபுரம் |
| கோபாலநாயக்கர் | - | திண்டுக்கல் |
| கேரள வர்மன் | - | மலபார் |
| துண்டாஜி | - | மைசூர் |

**VI. காரணம் கூறுக (ஏதேனும் 3 மட்டும்)** 3x2=6

32) உயரம் அதிகரிக்கும் பொழுது வெப்பம் குறைகிறது.

33) புவியில் நன்னீர் குறைவாக உள்ளது.

34) நீர்புகாத இடங்களில் ஊடுருவல் குறைவாக உள்ளது.

35) தீப்பாறைகள் எரிமலை பகுதிகளில் காணப்படுகிறது.

36) காலநிலையும் வானிலையும் வெவ்வேறு இடங்களில் மாறுபடுகின்றன.

**VII. வேறுபடுத்துக. (ஏதேனும் 4 மட்டும்)** 4x2=8

37) மண்வளப்பாதுகாப்பு மற்றும் மண்ணரிப்பு

38) கோள் காற்று மற்றும் பருவகாலக் காற்றுகள்

39) இடர் மற்றும் பேரிடர்

40) வேளாண் சார்ந்த தொழிலகங்கள் மற்றும் கடல் வளம் சார்ந்த தொழிலகங்கள்
41) புவிக்கோள மாதிரி மற்றும் புவிப்படம்
42) நில அதிர்வு மற்றும் சுனாமி

**VIII. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும் (ஏதேனும் 10 மட்டும்) 10x2=20**

43) ஆவணக் காப்பகங்கள் பற்றி சிறுகுறிப்பு வரைக.
44) துணைப்படைத் திட்டத்தில் கையெழுத்திட்ட நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
45) தட்ச சீலம் பற்றி குறிப்பு வரைக.
46) பெரிய அளவில் நெசவு உற்பத்திக்கு பயன்படுத்திய கண்டுபிடிப்புகளின் பெயர்களை எழுது
47) இந்திய விடுதலை போராட்டத்தில் ஈடுபட்ட முக்கியமான பெண்களை குறிப்பிடுக.
48) மண்ணின் வகைகளை கூறுக.
49) காலநிலை வரையறு.
50) நகரமயமாக்கல் என்றால் என்ன?
51) இடரின் முக்கிய வகைகள் யாவை?
52) ஆப்பிரிக்கா 'தாய் கண்டம்' என அழைக்கப்படுவது ஏன்?
53) நற்குடிமகனின் மூன்று பண்புகளை குறிப்பிடுக.
54) பணத்தின் மதிப்பு என்றால் என்ன?
55) மனித உரிமைகள் என்றால் என்ன?

**IX. விரிவான விடையளி (ஏதேனும் 4 மட்டும்) 4x5=20**

56) நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் பற்றி குறிப்பிடுக.
57) சுதந்திர போராட்டத்தில் பெண்களின் பங்கினைக் கண்டறியவும்.
58) மண்ணினை வகைப்படுத்தி விவரிக்கவும்
59) காற்று அதன் வகைகளையும் விவரி
60) குழந்தைகளின் பாதுகாப்பிற்காக அரசு மேற்கொண்டுள்ள சில நடவடிக்கைகள் யாவை?
61) முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.
62) சாலை விபத்துகள் நடக்காமல் இருக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை?
63) பொதுத்துறைக்கும் தனியார் துறைக்கும் உள்ள வேறுபாடுகளை விவரி.

**X. 64) இந்திய வரைபடத்தில் குறிக்கவும் 5x1=5**

i) டெல்லி ii) நாளந்தா iii) இந்தியப் பெருங்கடல் iv) பாரக்பூர் v) பம்பாய்

**X. 65) உலக வரைபடத்தில் குறிக்கவும் 10x1=10**

i) இந்தியா ii) கனடா iii) பூமத்தியரேகை iv) இந்தோனேஷியா
v) ஜப்பான் vi) இங்கிலாந்து vii) மெக்சிகோ viii) ஆப்பிரிக்கா
ix) பசிபிக் பெருங்கடல் x) அட்லாண்டிக் பெருங்கடல்.

விழித்துக் கொண்டிருக்கும் நேரமெல்லாம்
படித்துக் கொண்டிருப்போம்

## எமது வெளியீடுகள் (STATE BOARD)

6th to 12th Std - **STEP TO SUCCESS ENGLISH**

10th to 12th Std - **ELITE ENGLISH**

6th to 12th Std - **உன்னால் முடியும் தமிழ்**

10th to 12th Std - **அமுத சுரபி தமிழ்**

6th to 10th Std - **சமூகஅறிவியல்** (Tamil & English Medium)

8th to 10th Std - **அறிவியல்** (Tamil & English Medium)

**டால்பின் பப்ளிகேசன்ஸ்®**

239, கீழப்பட்டித்தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம், த.நா.

**Cell : 98653 06197 / 89256 77710 / 99435 67646**
**93453 14146 / 93453 30937**

Mail us : dolphin.pub2005@gmail.com Visit us : www.kalvidolphin.com

**63743 17883**

# 8

# டால்பின்®

உன்னால் முடியும்

புதிய பதிப்பு

# சமூக அறிவியல்

## வரைபடப் பயிற்சிப் புத்தகம்




டால்பின் பப்ளிகேசன்ஸ்®

# டால்பின்®

உன்னால் முடியும்

8

புதிய பதிப்பு

# சமூக அறிவியல்

# வரைபடப் பயிற்சிப் புத்தகம்


98653 06197 | 89256 77710 | 99435 67646

டால்பின் பப்ளிகேசன்ஸ்®

தரமே எங்களின் தாரக மந்திரம்

239, கீழப்பட்டித் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம். த.நா.

Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.com


© All Copyrights reserved

விலை : ரூ. 27

# பாடப் பொருளாக்கம்

| பயிற்சி எண் | மாதம் | பொருளடக்கம் | பக்க எண் | மதிப்பெண் | ஆசிரியர் கையொப்பம் |
|---|---|---|---|---|---|
| 1. | ஜீன் | ஐரோப்பியர்களின் வருகை | 1 | | |
| 2. | | வர்த்தகத்திலிருந்து பேரரசு வரை | 2 | | |
| 3. | ஆகஸ்ட் | மக்களின் புரட்சி | 3 | | |
| 4. | அக்டோபர் | இந்தியாவில் கல்வி வளர்ச்சி | 4 | | |
| 5. | நவம்பர் | இந்தியாவில் தொழிலகங்களின் வளர்ச்சி | 5 | | |
| 6. | நவம்பர் | ஆங்கிலேயர் ஆட்சியில் நகர்ப்புற மாற்றங்கள் | 6 | | |
| 6. | ஜீன் | பாறை மற்றும் மண் | 7 | | |
| 8. | ஜீலை | வானிலை மற்றும் காலநிலை | 8 | | |
| 9. | ஆகஸ்ட் | இடம் பெயர்தல் மற்றும் நகரமயமாதல் | 9 | | |
| 10. | அக்டோபர் | இடர்கள் | 10 | | |
| 11. | நவம்பர் & டிசம்பர் | கண்டங்களை ஆராய்தல் (ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்டிகா) | 11 | | |
| 12. | | கண்டங்களை ஆராய்தல் (ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்டிகா) | 12 | | |

பாட ஆசிரியர் கையொப்பம் தலைமை ஆசிரியர் கையொப்பம்


மாதம் : ஜீன்
பயிற்சி எண்:

**வரலாறு**

தேதி:

# 1. ஐரோப்பியர்களின் வருகை

1. இந்திய ஆறுகள் வரைபடத்தில் கீழ்க்கண்ட ஐரோப்பிய வர்த்தக மையங்களைக் குறித்து காட்டுக.
   1. கள்ளிக்கோட்டை, 2. கொச்சின், 3. மெட்ராஸ், 4. பாண்டிச்சேரி, 5. சூரத், 6. சின்சுரா,
   7. பழவேற்காடு, 8. கல்கத்தா




மாதம் : ஜீன்
பயிற்சி எண்:

## 2. வர்த்தகத்திலிருந்து பேரரசு வரை

தேதி:

1. இந்திய - நதிகள் வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களை குறிப்பிடுக.
   1. பிளாசி 2. பக்சார் 3. புரந்தர் 4. ஆற்காடு 5. வந்தவாசி




மாதம் : ஆகஸ்ட்

# 4. மக்களின் புரட்சி

தேதி:


பயிற்சி எண்:

1. இந்திய ஆறுகள் வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்.
   1. டெல்லி, 2. லக்னோ, 3. மீரட், 4. பாரக்பூர், 5. ஜான்சி, 6. குவாலியர், 7. கான்பூர்



மாதம் : அக்டோபர் **5. இந்தியாவில் கல்வி வளர்ச்சி** தேதி:
பயிற்சி எண்:

1. **கீழ்க்காணும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.**
   1. நாளந்தா, 2. திருச்சிராப்பள்ளி, 3. மதுரை, 4. காஞ்சிபுரம், 5. விக்ரமசீலா, 6. டெல்லி, 7. வாரணாசி, 8. பம்பாய், 9. கல்கத்தா, 10. சென்னை




மாதம் : நவம்பர் தேதி:

பயிற்சி எண்:

# 6. இந்தியாவில் தொழிலகங்களின் வளர்ச்சி

கீழ்க்காணும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.

1. பம்பாய், 2. கல்கத்தா, 3. டாக்கா, 4. ஜாம்ஷெட்பூர், 5. ரிஷ்ரா, 6. அகமதாபாத், 7. கான்பூர் 8. குல்டி, 9. புதுடெல்லி, 10. அஸ்ஸாம்




**மாதம் : நவம்பர்** **தேதி:**

**பயிற்சி எண்:**

# 7. ஆங்கிலேயர் ஆட்சியில் நகர்ப்புற மாற்றங்கள்

**இந்திய வரைபடத்தில் துறைமுக நகரங்கள், இராணுவ குடியிருப்புகள், மலைவாழிடங்களைக் குறிக்கவும். (ஒவ்வொன்றிலிருந்தும் ஏதாவது நான்கு இடங்கள்)**



மாதம் : ஜீன்
பயிற்சி எண்:


# புவியியல்

தேதி:

## 1. பாறை மற்றும் மண்

**வரைபடப் பயிற்சி**

இந்திய நிலவரைபடத்தில் கரிசல் மண் காணப்படும் பகுதிகளைக் குறிக்கவும்.




மாதம் : ஜீலை
பயிற்சி எண்: தேதி:

## 2. வானிலை மற்றும் காலநிலை

**கீழ்க்கண்டவைகளை உலக வரைபடத்தில் குறிக்கவும்.**

1. வெப்ப மண்டலங்கள்
2. காற்றழுத்த மண்டலமும், கோள் காற்றுகளும்




மாதம் : ஆகஸ்ட்

பயிற்சி எண்:

தேதி:

# 4. இடம் பெயர்தல் மற்றும் நகரமயமாதல்

1. உலக வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.
   1. டோக்கியோ, 2. புது தில்லி, 3. மெக்சிகோ நகரம், 4. ஷாங்காய், 5. சா-பாலோ, 6. ஓசியானியா
   7. இலத்தீன் அமெரிக்கா, 8. பாரிஸ், 9. இலண்டன், 10. கெய்ரோ




மாதம் : அக்டோபர்

# 5. இடர்கள்

தேதி:

பயிற்சி எண்:

தமிழ்நாடு வரைபடத்தில் 14 கடற்கரை மாவட்டங்களை வெவ்வேறு வண்ணங்களில் தீட்டவும்.




**மாதம் : நவம்பர் & டிசம்பர்** **தேதி:**

**பயிற்சி எண்:**

# 7. கண்டங்களை ஆராய்தல் (ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்டிகா)

1. ஆப்பிரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவின் புற எல்லை வரைபடத்தில் பின்வருவனவற்றைக் குறிக்கவும்.


ஆப்பிரிக்கா : புவிநடுக்கோடு, அட்லஸ் மலை, சஹாரா, கிழக்கு உயர் நிலங்கள், மத்திய தரைக்கடல், அட்லாண்டிக் பெருங்கடல், இந்தியப் பெருங்கடல், சூயஸ் கால்வாய், கிளிமஞ்சாரோ சிகரம்




**மாதம் : நவம்பர் & டிசம்பர்** **தேதி:**
**பயிற்சி எண்:**

# 7. கண்டங்களை ஆராய்தல் (ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்டிகா)


**ஆஸ்திரேலியா** : பெரிய பிரிவு மலைத்தொடர், பெரிய பவளத் திட்டு, பிளவுப் பள்ளத்தாக்கு, டாஸ்மேனியா, மகரரேகை, பசிபிக் பெருங்கடல், பெரிய ஆஸ்திரேலிய மணல் பாலைவனம், இந்தியப் பெருங்கடல், சிட்னி, கான்பெரா.



# மாதிரி வரைபட பயிற்சி



# மாதிரி வரைபட பயிற்சி



விழித்துக் கொண்டோரெல்லாம்
பிழைத்துக் கொண்டார்

## எமது வெளியீடுகள் (STATE BOARD)

6th to 12th Std - **STEP TO SUCCESS ENGLISH**

10th to 12th Std - **ELITE ENGLISH**

6th to 12th Std - **உன்னால் முடியும் தமிழ்**

10th to 12th Std - **அமுத சுரபி தமிழ்**

6th to 10th Std - **சமூகஅறிவியல்**
(Tamil & English Medium)

8th to 10th Std - **அறிவியல்**
(Tamil & English Medium)


**டால்பின் பப்ளிகேசன்ஸ்®**

239, கீழப்பட்டித்தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம், த.நா.

Cell : 98653 06197 / 89256 77710 / 99435 67646
93453 14146 / 93453 30937

Mail us : dolphin.pub2005@gmail.com Visit us : www.kalvidolphin.com

G Pay 63743 17883